# வண்ணத்துப் பூச்சிகள்

01



பிரதேச செயலகம்
கோறளைப்பற்று
வாழைச்சேனை.

சர்வதேச சிறுவர் தின, முதியோர் வாரத்தை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலர்-2011

KP 11

சர்வதேச சிறுவர் தின முதியோர்வார

சிறப்பு மலர்- 2011

# வண்ணத்துப் பூச்சிகள்

01

**பிரதேச செயலகம்**
**கோறளைப்பற்று**
**வாழைச்சேனை.**

# வண்ணத்துப் பூச்சிகள்

## சர்வதேச சிறுவர் தின முதியோர் வார சிறப்பு மலர்

### முன்னிலை

**திரு.S.கிரிதரன்**
பிரதேச செயலாளர்

### இதழாசிரியர்

**திரு.அ.அழகுராஜ்**
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்.

### மதியுரைஞர் குழு

**திரு.S.ராஜ்பாபு.**
உதவி பிரதேச செயலாளர்

**திருமதி.ச.ஜெயேந்திரா**
கணக்காளர்

**திரு.S.பிரபாகரன்**
உதவி திட்டமிடல் பணிப்பாளர்

**திரு. S.A.றகீம்**
நிருவாக உத்தியோகத்தர்

World Vision · Save the Children · Y.M.C.A

அச்சிட்டோர்: மினா அச்சகம்,பிரதான வீதி,ஓட்டமாவடி. 0771633150

## உள்ளே......


இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள்

சிறுவர் எமது சொத்து

முதியோர் வாழ்வை ஒளிமயமாக்குவோம்

பிள்ளை மனம்

குழந்தைக் கல்வி

தலைமைத்துவம்

நாளைய தலைவர்களான எமது சிறுவர்களை ..........

சின்னஞ் சிறார்கள் அவர்கள் மண்ணின் மணிகள்

சிறுவர்களுக்கு உதவுவது எப்படி

குருட்டுச் சிறுமி

சிறுவர் சட்டமும் நீதி மன்ற முறைமையும்

விடியலை தேடும் வாண்டுகள்

வன்முறை சாரா தொடர்பாடல்

பிரதேச செயலகமும் சிறுவர் பாதுகாப்பு..........

பெற்றோரைப் பேணுவோம்

முதுமை அருமை

அங்கவீனம் ஒரு நோக்கு

பரிதவிப்பு

பொழுது சாயும் நேரம்

சமுர்த்தியில் சிறுவர் திட்டம்

கருகிய மொட்டு

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கான நாடு ...................

புகைத்தல்

முதியோரை உலகமயமாக்குவோம்

சின்னஞ் சிறு சிறுவர் பாடல்

பொன்மொழிகள்

சிறுவர் கழகமே!

சிறுவர் நலன் காப்போம்

முதியோர் சங்க விபரம்

பாடசாலை மட்ட போட்டி முடிவுகள்

நன்றியுரை




**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch) Batticaloa Centre,
Ashrama & Children Homes.

Ramakrishnapuram, Batticaloa.
Phone: 0094 65 2222752
Email- rkmbat@gmail.com

# ஆசிச் செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தால் சர்வதேச ரீதியில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் உலக சிறுவர் தினம், முதியோர் வாரம் ஆகியவற்றின் சிறப்பம்சமாக முதன் முறையாக "வண்ணத்துப் பூச்சிகள்" எனும் சிறப்பு மலர் ஒன்று மலரவிருப்பது மகிழ்ச்சியை தருகின்றது.


நம் விலைமதிப்பற்ற சொத்துக்களாகிய சிறுவர்களின் கைகளிலேயே நம் பிரதேசத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. எனவே நமது சிறார்கள் சிறந்த கல்வியையும் நல்ல பண்புகளையும் பெறுவதற்கு நாம் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இன்று பிள்ளைகளாலும் சமூகத்தாலும் ஒதுக்கப்பட்ட சாதனை படைத்து விட்டு சந்தோசமாக இருக்க வேண்டிய அநேக முதியோர்கள் அனுதாபப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இச்சிரேஷ்ட பிரஜைகளின் அங்கலாய்ப்புக்கள் பூர்த்தி செய்யப்படக்கூடிய வாய்ப்புக்களுக்கும் நாம் வடிகாலமைத்துக் கொடுக்க வேண்டும்.

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உலக சிறுவர் தின முதியோர் வார நிகழ்வுகள் மற்றும் "வண்ணத்துப்பூச்சிகள்" சிறப்பு மலர் வெளியீடு என்பன வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் இறை ஆசிவேண்டி வாழ்த்துகின்றேன்.

இறைபணியில்

**சுவாமி ஞானமயானந்தா**





## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சமூகத்தின் பாதுகாப்பிலும், நம்பிக்கையிலும் சிறப்பாக வாழவேண்டியவர்கள் சிறுவர்களும், முதியோர்களும் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்றவகையிலும், முதியோர்களே எமது அனுபவச் சொத்துக்கள் என்ற வகையிலும் இவர்களை போற்றி பாதுகாத்து பேணவேண்டியது எமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஆனால் இன்றைய சமூகம் சிறுவர்களின் மீதும், முதியோர்கள் மீதும் ஏற்படுத்தும் அழுத்தங்களின் அடிப்படையில் அவர்களுடைய திறமைகளும், உள்ளுணர்வுகளும் சிதைக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, குறுகிய வட்டத்திற்குள் அவர்களின் வாழ்க்கை முறைகள் புதையுண்டு போகின்றது. இதைக்கருத்திற் கொண்டு இவர்களைப் பேணி பாதுகாப்பதுடன், இவர்களின் திறன்களையும், உள்ளுணர்வுகளையும், வெளிக்கொணர்ந்து, உரிமைகளை நிலை நாட்டுவது அனைவரதும் கடமையாகும்.

இதையொட்டி கோறளைப்பற்று பிரதேச செயலகம் சர்வதேச சிறுவர் தின, முதியோர் வார நிகழ்வை முன்னிட்டு "வண்ணத்துப் பூச்சிகள்" எனும் சிறப்பு மலரை கன்னி வெளியீடாக வெளியிடுவதற்கு நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வண்ணத்துப் பூச்சிகள் தொடர்ந்தும் சிறகடித்து பறக்க வாழ்த்துவதுடன், சிறுவர்களும்,முதியவர்களும் "வண்ணத்துப் பூச்சிகள்" போன்று சிறகடித்து பறக்கக்கூடிய மனநிலை கொண்டவர்கள் என்பதை வெளிக் கொணர்ந்த இச்சிறப்பு மலர் வெளியீட்டை வெளியிடுவதற்கு பாடுபட்ட பிரதேச செயலக உத்தி யோகத்தர்களுக்கும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நன்றியை கூறுவதுடன், மென்மேலும் இவர்களுடைய சேவைகள் பெருக என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**S.கிரிதரன்**

பிரதேச செயலாளர்

பிரதேச செயலகம்

கோறளைப்பற்று

வாழைச்சேனை.

## அரசாங்க அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தினால் சர்வதேச சிறுவர் தினத்தையும் முதியோர் வாரத்தையும் நினைவுகூறும் வண்ணம் "வண்ணத்துப் பூச்சிகள்" என்ற பெயரில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சிறுவர்களின் உரிமைகள், சிறுவர் எதிர் கொள்ளும் துன்பங்கள், துயரங்கள் அதனோடு இணைந்த அவலங்களின் தாக்கங்கள், முதியவர்களின் ஏக்கங்கள், அவர்கள் நாளாந்தம் தமது ஜீவனோபாயத்திற்காக போராடும் போராட்டங்களின் சம்பவக்கோர்வைகளை பதிவுகளாக்கி கன்னி வெளியீடாக இம்மலர் மலர்கிறது.

சிறுவர்களும் முதியவர்களும் எமது செல்வங்கள் அவர்களின் உன்னத ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிசமைக்கும் வாயிலாக "வண்ணத்துப்பூச்சிகள்" எங்கும் சிறகடித்து வியாபிக்கும் என்ற நம்பிக்கையுண்டு.

இக்கன்னி வெளியீட்டிற்கு உழைத்த ஒவ்வொரு இதயத்தையும் நன்றியுடன் நேசிப்பதோடு, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் என்ற வகையிலும், இம்மண்ணை நேசிப்பவன் என்ற வகையிலும், பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.சுந்தரம் அருமைநாயகம்**
மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு



# Message from the commissioner of probation and child care services

It is indeed a pleasure to issue this message for a new souvenier "Butter flies" to be published by the divisional secretariat Koralai pattu valaichenai to mark the universal Children's Day and the Elder's week-2011

Both Elders and Children deserve our due attention and warm affection as they are in need of our care and protection.Our elders with their proven experience and wide knowledge have brought up,brought and guided us through out our lives. Our children on the other hand will take over the responsibility of developing a conducive society in future when they become adults.

I do really appreciate your worthy endeavor in bringing out this souverir for the first time and I hope you will continue it as well as.

**D.M.S.Abayagunawardana**

Commissioner

Probation and Child Care Services

## சமூகசேவைப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



சர்வதேச சிறுவர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் தினத்தை முன்னிட்டு இவர்களை கௌரவிக்கும் முகமாக தங்கள் பிரதேச செயலகத்தினால் முதன் முறையாக "வண்ணத்துப் பூச்சிகள்" என்னும் சிறப்பு மலரை வெளியிட இருக்கும் முயற்சிக்கு முதற்கண் எனது மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்.நாளைய தலைவர்கள் எதிர்கால முதியோர்கள்.சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். இவ்வுலகின் எதிர்கால சமுதாய சிற்பிகளாக மிளிர விருக்கும் சிறுவர்களை நல்வழியில் நடாத்தி, பாதுகாத்து சமூகத்தை அவர்களிடம் கையளிப்பதற்கேற்ற பாத்திரங்களாக அவர்களை உருவாக்க வேண்டியது எமது பாரிய பொறுப்பாகும்.

முதுமை என்பது ஒரு பருவமே கருவறையில் எம்மை சுமந்த எம் மனவீட்டில் ஒரு சிறிய அறை கூட இல்லாமல் அவர்கள் இன்று முதியோர் இல்லங்களில் தஞ்சம் அடைகிறார்கள். மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படும் முதியோர்களை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும்,கௌரவமாகவும் மதிக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

இந்த வகையில் சிறுவர்,முதியோர் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் தங்களினால் வெளியிடப்படும் "வண்ணத்துப் பூச்சிகள்" இதழுக்கு எனது மனங்கனிந்த நல் வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வண்ணத்துப் பூச்சியின் இதழ்கள் இன்னும் விரிய எனது நல் வாழ்த்துக்கள்.

**என்.மணிவண்ணன்**
பணிப்பாளர்
சமூக சேவைகள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.



## வலயக்கல்விப் பணிப்பாளரின்வாழ்த்துச் செய்தி

கோறளைப்பற்று பிரதேசம் சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு "வண்ணத்துப் பூச்சி" எனும் கையேடொன்றை வெளியிட முன் வந்தமை மகிழ்ச்சிக் குரிய விடயமாகும்.

எமது பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரை, கவிதை,பேச்சு, சித்திரப்போட்டிகளை நடாத்தி, மாணவர்களின் மனதில் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும், முதியோரைப் பாதுகாக்க வேண்டிய நல்லெண்ணம் ஏற்படத்தக்க வகையிலும்,உணர்வூட்டியுள்ளனர். ஒரு பிரதேசத்தின் சமூகம் விழிப்படையும் போதுதான் அப்பிரதேச கல்வி செயற்பாடுகளும் சிறப்புற அமையும்

மாணவர்களின் எழுத்தாற்றலை தூண்டுவதற்கு சிறுவர் கழகங்கள் ஊடாக அவர்களது ஆக்கங்களை சேகரித்து நூலாக்க முயற்சித்திருப்பது பாராட்டிற்குரியது. சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படாமல் தங்களைத்தாமே பாதுகாப்பதற்கு இத்தகைய விழிப்புணர்வு செயற்பாடுகள் அவசியம். அதுமட்டுமல்ல முதியோர் எமது சொத்துக்கள் இவர்களிடமிருந்து எமது பாரம்பரிய கலை,கலாச்சார செய்திகளையும், பாரம்பரிய நடைமுறைகளையும், கற்றறிந்து பேணிப்பாதுகாக்க வேண்டியது இன்றைய சிறார்களின் கடமையாகும். பல சிறுவர்கள் முதியோர்களை மதிப்பதுமில்லை. அவர்கள் கூறும் நற்பண்புகளை ஏற்பதுமில்லை. இதனால் பல வீடுகளில் குழப்பங்கள் ஏற்படுகிறது. இந்நிலையின்றி குடும்பங்களில் மகிழ்ச்சி நிலை முதியோர் வீடுகளிலும், சமூகத்திலும் மதிக்கப்படல் இன்றியமையாதது.

சிறுவர்களையும் முதியோர்களையும் இணைத்து ஒரே விழாவாக முன்னெடுக்கும் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு செயலாளருக்கும் சக ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். பல்வேறு பெறுமதியான ஆக்கங்களை கொண்டு முதன் முறையாக வெளிவரும் இக்கையேடு போன்ற பல இப்பிரதேசத்தில் உருவாகி சமூகத்திற்கு விழிப்பை ஏற்படுத்த வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி எஸ்.சக்கரவர்த்தி**

வலயக்கல்விப் பணிப்பாளர்

கல்குடா கல்வி வலயம்

World Vision



## பிராந்திய திட்டமுகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

இளஞ்சிறார்களினால் இயல்பாகவே வெளிக்கொணரப்படுகின்ற இந்த "வண்ணாத்துப் பூச்சிகள்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

பாடசாலை கல்வி, பாடப்புத்தகக் குறிப்புக்களுடன் நிர்ப்பந்திக்கப்பட்டு இறுக்கமான மனோ நிலையில் கல்விபயிலும் ஆற்றலை வெளிக் கொணர வேண்டிய தேவை சமூகத்தவர் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

இன்றைய நவீனத்துவ உலகினிலே சிறுவர்களின் தேவைகளும் மாற்றமடைந்த காலத்தின் தேவைகளிற்கேற்ப இசைந்து ஓடவேண்டிய ஓர் நிலைமை எமது சமூக பிள்ளைகளும் ஏற்றுக் கொண்டு தமது ஆளுமை இத்தலைமைத்துவப்பண்பு புதிய சிந்தனையை ஏற்றல் புதிய விடயங்களை அறிதல் படைப்பாற்றல்களை வெளிக் கொணரல் என பலமுகங்களில் தமது எதிர்பார்ப்புக்களையும் வாஞ்சைகளையும் தம் அகத்தே சுமந்து வாழும் சிறுவர்களுக்கு இச்சஞ்சிகையின் வரவானது இனிப்பான எதிர்பார்ப்பாக அமையும் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய யதார்த்தமாகிறது.

இம்முயற்சியினை இத்துடன் நிறுத்தி விடாமல் தொடரவேண்டுமெனவும் இதற்காக உழைத்த சிறுவர்கள் ஆக்கங்களை வழங்கியவர்கள் ஆலோசனை வழங்கிய பெரியவர்கள் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலக அதிகாரிகள், சமூக நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது சார்பிலும் WORLD VISION சார்பிலும் நல்வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதோடு அனைத்து பிராந்திய சிறுவர்களின் நல்வாழ்விற்காக இறையாசிகளையும் வேண்டுகிறேன்.

**திரு.பா.றோகாஷ்**

முகாமையாளர்

கோறளைப்பற்று பிராந்திய அபிவிருத்தி திட்டம்

WORLD VISION.

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து......



"வண்ணத்துப் பூச்சுகள்" எனும் பெயரில் சிறுவர்களின் படைப்பாற்றல் களையும்,முதியோரின் கௌரவத்தை வெளிப்படுத்தும் நோக்கத்தோடு முதலாவது கன்னி வெளியீடான சிறப்பு மலர் ஊடாக சந்திப்பதில் பெருமகிழ்சியடைகிறேன்.

"நாட்டை காப்பது போன்று எங்களதும், உங்களதும் சிறுவர்களை நாம் பாதுகாப்போம்" எனும் கருப்பொருளில் இவ்வருட சர்வதேச சிறுவர் தினம் அமையப் பெற்றுள்ளது. சிறுவர்களின் பாதுகாப்பு என்பது குடும்ப சூழ்நிலையிலேயே காணப்பட வேண்டும். குடும்பத்தில் பாதுகாப்பு கிடைக்கப்பெறாவிடத்து, எந்த ஒரு நபரினாலோ அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியினூடாகவோ சிறுவர்களுக்கான முழுமையான பாதுகாப்பை வழங்க முடியாது. அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதை பெற்றோர்களும் சமூகத்தவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த கால யுத்தம், இயற்கை அனர்த்தங்களினூடாக இன்று தாய் தந்தையை இழந்து, பாதுகாப்பற்ற நிலையிலும், பல இன்னல்களுக்கு மத்தியிலும் எத்தனையோ சிறுவர்கள் வாழ்ந்து இருப்பதை எமது பிரதேசங்களில் காணக்கூடியதாக உள்ளது. இந்த அவல நிலை எதிர்காலத்திலும் தோற்றுவிக்கப்படலாகாது. இந்தப்பின்னணியில் இவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் பொறுப்பும் நம் எல்லோரினதும் கடமையாகும்.

எமது கோறளைப்பற்று பிரதேசத்தில் சுமார் ஐந்தாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், சவால்களையும் வெளிப்படுத்த வேண்டிய தேவையும், ஐ.நா சபையின் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமையை அடியொற்றியதாக சிறுவர்கள் தங்களது கருத்துக்களை வெளியிடுவதற்கான களமாகவும், அவர்களது திறமைகளையும், ஆற்றல்களையும், ஆளுமைகளையும், தலைமைத்துவத்தையும் விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டும் எதிர்காலத்தில் சிறந்த ஆற்றல் மிக்க படைப்புக்களை உருவாக்கும் நல்லெண்ணத்துடனும், சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வை பலமட்டத்தில் விரிவடையச் செய்வதற்காகவும் மற்றும் முதியோரின் நலன்களையும் சுமந்து சர்வதேச சிறுவர் தின, முதியோர் வாரத்தினை சிறப்பிக்கும் முதலாவது கன்னி வெளியீடாக இம்மலர் வெளிவருகின்றது. இம் மலர் ஆண்டு தோறும் "வண்ணத்துப் பூச்சிகள்" போன்று சிறகடித்து பறந்து வெளிவரவேண்டும்.

இந்நூல் வெளியிட ஆலோசனைகளையும் அனுமதியினையும் வழங்கிய பிரதேச செயலாளர் , உதவிப்பிரதேச செயலாளர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன், வாழ்த்துச் செய்திகள், ஆக்கங்கள் வழங்கியவர்களுக்கும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும், நிதி மற்றும் உதவிகளையும் வழங்கிய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நாளைய எமது நாட்டை கட்டியெழுப்பும்
தலைவர்களே இன்றைய சிறுவர்கள்...."


**அ.அழகுராஜ்**
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்,
பிரதேச செயகம், கோறளைப்பற்று,
வாழைச்சேனை.

அகிலன் அர்ச்சனா

மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

# இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள்

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்று பாடியுள்ளார் ஔவையார். எமது இந்தப் மனிதப் பிறவி உன்னதமானது. நாம் வாழ்க்கையில் சாதிக்க வேண்டியவை பல உள. இன்றைய நவீன யுக மாந்தர்கள் அனைவரினதும் தலையாய கடமை எமது எதிர்கால சந்ததியினருக்கு நல்வாழ்வினைப் பெற்றுக் கொடுத்தலேயாகும். இவ்வுலகிலேயே பெறுமதி வாய்ந்த செல்வம் குழந்தைச் செல்வமாகும். எம் அனைவரினதும் பாரிய சொத்தாகும்.



"இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் ஆவர்" எமது இன்றைய சிறார்களை பாதுகாப்பதன் மூலமே நாளைய நல் சமூகத்தை கட்டி எழுப்ப முடியும்.அவர்களுக்கு நல்ல தரமான கல்வி,போசாக்குணவுகள் மற்றும் முக்கியமாக சுதந்திரமும் வழங்கப்பட வேண்டும்.சிறுவர் உரிமைகள் பேணப்பட வேண்டும். இதனை நோக்காகக் கொண்டு நாடெங்கிலும் அக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது.

சிறுவர் சமுதாயம் எனும் போது பதினெட்டு வயதிற்குட்பட்டவர்களை அது குறிக்கின்றது.சட்டத்தின் மூலம் சிறுவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையில் 1989ஆம் ஆண்டு சிறுவர் உரிமை பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பிரகடனம் எமது நாட்டிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. சிறுவர் பிரகடனத்தின் படி சிறுவர்கள் மதிப்பிற்குரியவர்கள் ஆவர்.சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்புக்கள் சிறுவர் பாதுகாப்பு நிதியம், சிறுவர் அதிகார சபை போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.சிறுவர்களின் உரிமைகளாவன ஆரம்ப கல்வியை கட்டாயமாகவும் இலவசமாகவும் பெறல்,ஓய்வு நேரத்தை சிறப்பாக கழித்தல்.பொழுது போக்குகளில் ஈடுபடல்,பாகுபாடுகளிலிருந்து பாதுகாப்பு பெறல்,விரும்பிய கல்வியைப் பெறல்,சங்கங்களில் அங்கத்துவம் வகித்தல், விரும்பிய மொழியினைப் பேசுதல், கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடல் மற்றும் கலை கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடல் என்பனவாகும்.

வளரும் பயிர் அதன் வளர்ச்சிப்பருவத்தில் பூச்சி,புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்று கருகிப்போவதுமுண்டு. அது போன்றே இன்றைய எம் சமூகத்தில் சிறுவர் உரிமைகள் மீறப்படுகின்றன. சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் அதிககரித்து வருகின்றன.கல்வி கற்க வேண்டிய இடத்தில் சிறார்களை வேலைக்கு அமர்த்துகின்றனர்.குறிப்பாக மலையகப்பகுதிகளில் இது நிகழ்கின்றது.

வறுமைப்பிடியில் சிக்கித்தவிக்கும் தோட்டப்புறமக்கள் வேறு வழியின்றி தமது பிள்ளைகளை கொழும்பு போன்ற நகர்ப்பகுதிகளில் வேலைக்கு அனுப்புகின்றனர்.அங்கே அச்சிறுவர்கள் சொல்லொண்ணாத்துன்பத்தை அனுபவிக்கின்றார்கள்.அங்கே உடல் ரீதியிலும் உள ரீதியிலும் அவர்களது உரிமைகள் மீறப்படுகின்றன.

பறந்து திரியும் பறவைகளின் சிறகுகளை வெட்டி விட்டால் அந்தப்பறவையின் நிலை என்னவாகும்? சற்று சிந்தித்துப்பாருங்கள். அதே நிலமைதான் எமது சிறார்களுக்கும்.அவர்களின் பிஞ்சுக்கரங்களிலே பாரிய குடும்பச்சுமையானது சிறு வயதிலேயே சுமத்தப்படுகின்றது. அத்தோடு எமது சமூகத்தில் சிறுவர் மீதான பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களும் அதிகரித்து வருகின்றன.அத்தோடு யுத்த நிலமைகள், போதைப்பொருட்கள் தீய நண்பர்கள்,ஆபாச சினிமா என்பன சிறார்களை தீய வழிக்கு இட்டுச் செல்கின்றன. இதுவும் ஒருவகையான சிறுவர் உரிமை மீறலாகும். போதைவஸ்த்துப் பொருட்கள் காரணமாக குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன.

இளங்குருத்துக்களான எமது எதிர்கால சந்ததியினரை வண்டுகளான போதைப் பொருட்கள் அரித்துச் செல்கின்றன "காவோலை விழ, குருத்தோலை சிரிக்கும்" என்பார்கள். ஆனால் இன்று நிலைமையே மாறிவிட்டது. "இளங் கன்று பயமறியாது" என்பதிற்கிணங்க இன்றை ய இளைஞர் சமுதாயம் இப்போதை பொருட்களால் தம் ஆரோக்கியமான வாழ்வை கெடுத்துக் கொள்வதுடன் சமுதாயத்துக்கும் கேடு விளைவிக்கின்றனர்.

அடுத்து தீய நண்பர்களால் சிறார்கள் கெட்ட பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டு வருகின்றனர். இன்றைய நிலையில்" கெட்ட நண்பனுடன் சேர்ந்திருப்பதை விட தனிமையில் இருப்பது மேலானது,தனிமையில் இருப்பதை விட சிறந்த நண்பருடன் இருப்பது சிறந்தது" . அடுத்து ஆபாச சினிமா சிறார்களின் எதிர்கால வாழ்க்கையையும் சமூக கௌரவத்தையும் போக்கி விடுகின்றது. மற்றும் சில தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளாலும் சிறுவர்களில் மனம் எனும் அமிர்தம் நஞ்சாகி விடுகின்றது. "இளைஞர்களே கனவு காணுங்கள்" என்றார் அப்துல் கலாம். அதாவது எதிர்கால இலட்சியத்தையே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். முட்கள் நிறைந்த இந்த சவாலான வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு ஒரே வழி இளைஞர்களின் முற்போக்கான இலட்சியமாகும்.

தகாத வார்த்தைப்பிரயோகம் பெற்றோர்கள் வெளிநாட்டிலிருத்தல், பெற்றோர்கள் வேலைக்குப் போவதால் பிள்ளைகளை கவனியாமை,பெற்றோரை இழந்திருத்தல், ஏனையோரால் கொடுமைப்படுத்தப்படல் என்பன சிறார்களில் ஏற்படும் மனத்தாக்கங்களிற்கான பிரதான காரணங்களாகும்.

சிலர் தவறான முறையில் பெற்ற பிள்ளைகளை தெருவிலோ அல்லது அநாதை விடுதியிலோ கைவிட்டுச்செல்கின்றனர். இதனால் எமது சமூகமே பாதிக்கப்படுகின்றது.நாம் சமூகத்தில்காணும் படிப்பில் நாட்டம் கொள்ளாத,சமூக விரோதிகளாகவுள்ள ஒவ்வொரு இளைஞர்களினதும

குடும்பப்பின்னணியை ஆராய்வோமானால் ஒவ்வொருவருக்குள்ளும் சோகக் கதைகளுண்டு.

இன்றைய சிறுவர்கள்தான் எதிர்கால உலகை சுபிட்சமாக்கும் வல்லமை கொண்ட பொக்கிஷங்களாவர். இன்றைய சிறார்கள்தான் வளமான வாழ்வை கொண்டு நடாத்தும் ஒளிமணிகள்! தியாகச்சுடர்கள்! முத்துச்சுடர்கள்! புரட்சிவாதிகள் எனக்கூறின் மிகையாகாது. உலகளாவிய ரீதியில் வாழும் சிறுவர்கள் சமமான உரிமைகளினூடாக சந்தோசமாக வாழவும்.வாழ்வை வளப்படுத்துவதன் மூலமும் சிறுவர்களின் வாழ்வில் உன்னத மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மூலமும் ஐக்கிய நாடுகள் சபை ஒக்டோபர் முதலாம் திகதியை சிறுவர் தினமாக பிரகடனம் செய்துள்ளது.

"எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் அவன் மண்ணிற் பிறக்கையிலே நல்லவனாவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்கிறது. ஒரு திரைப்படப்பாடல். ஒரு மனிதனின் குழந்தைப்பருவ வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. ஒருவன் சிறுவனாகி இளைஞனாகி தலைவனாக மலர்கின்றான். ஆகவே தான் இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் எனும் கூற்றும் ஏற்கக்கூடியதே ஆகும்.

எனவே இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்களாக மிளிர வேண்டுமாயின் அவர்கள் நல்ல கல்வியறிவும், நல்ல ஒழுக்கமும் பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவர்களாக, நல்ல குறிக்கோள் உள்ளவர்களாக திகழ வேண்டியதும் மிக மிக அவசியமாகும். நாளைய தலைவர்களாகும் தகுதி அவர்களது வாழ்க்கை நெறியிலேயே பெரிதும் தங்கியுள்ளது என்பதை மறக்கக்கூடாது. சமூகத்தினரும் இதனையுணர்ந்து சிறுவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து, நாளை ய நற்சமூகத்தை உருவாக்க வேண்டும் .

"கண்ணின் இமை போல கண்ணான சிறார்களைப் பாதுகாப்போம்"



சிறுவர்தின - பிரதேச பாடசாலைமட்டப் போட்டியில்
இடைநிலைப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

# சிறுவர் எமது சொத்துக்கள்!

**செ.அக்ஷிக்கா**

மட்/பேத்தாழை விபுலானந்தா் வித்தியாலயம்



சின்னஞ் சிட்டுக்களே வண்ண மொட்டுக்களே
பாசப்பறவைகளே வாசங் கொண்ட மலா்களே
வைரமுத்துக்களே வையகத்தின் வசந்தங்களே
நீங்கள் எங்களுக்காய் இறைவன் தந்த சொத்துக்களே!

சின்னஞ் சிறுவா்களே சிலை வடிக்கும் சிற்பிகளே,
சீரான வாழ்விற்கு சிரிப்பளிக்கும் மழலைகளே,
கலைமிகு வரிகளிலே கவி படைக்கும் கலைஞா்களே,
நீங்கள் எங்களுக்காய் இறைவன் தந்த சொத்துக்களே!!

அன்னை மடியில் தவழ்ந்து அரவணைப்பில் மிதந்து
அயராது உழைத்திட திடங்கொண்டு எழுந்தவா்களே,
எதிா்கால சமூகத்தின் எழுச்சிக்காய் தளிா்டும்வித்துக்களே,
நீங்கள் எங்களுக்காய் இறைவன் தந்த சொத்துக்களே!!!

கல்விக்கழகைக்கூட்ட கடைந்தெடுத்த அமுதங்களே,
கமல மலா்களாய் செழிப்பூட்டும் செங்கதிா்களே,
சுடா்விட்டு ஒளியேற்றும் சுந்தரப் பிஞ்சுகளே,
நீங்கள் எங்களுக்காய் இறைவன் தந்த சொத்துக்களே,
இசையையும் மெருகூட்டும் இசையமைப்பாளா்களே
இன்பமுடன் பண்ணிசைத்து
பரதமும் படைத்திடும் பண்பாளா்களே
பணிவுடனே பரவசமூட்டி
பல்கலை தந்திடும் பாண்டித்தியா்களே
நீங்கள் எங்களுக்காய் இறைவன் தந்த சொத்துக்களே!

சிறுவர்தின- பிரதேச பாடசாலை மட்டப் போட்டியில்
மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

# முதியோர் வாழ்வை ஒளி மயமாக்குவோம்

**சி.கோமஜெயந்தன்**

மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம்

"உலகில் உயர்ந்ததும் பிறப்பினில் சிறந்ததும் இந்த மனிதப்பிறவியே" என்ற வாக்கிற்கு அமைவாக வாழ்ந்து முடித்து வாழ்க்கைக்கு ஓய்வு சேர்க்கும் இந்த உயர் பருவமான முதுமைப் பருவம் பற்றி பேசுவது எனக்கும் என்னை சார்ந்த இளம் பருவத்திற்கும் கிடைத்த ஒரு பிறவிப் பேறாகும்.

வாழ்க்கைப் பருவத்திலே பல பருவங்கள் உண்டு. அந்த வகையில் குழந்தைப் பருவம். இளமைப்பருவம். முதுமைப்பருவம் என்று பாகுபடுத்துவர். கற்றறிந்த அறிஞர் அந்த வகையில் ஏனைய பருவங்கள் போல எம் சமூகத்தவரிடையே முக்கியத்துவம் பெறுகின்றது. காரணம் வாழ்க்கையின் கடைசித்தறுவாயில் பயணித்துக் கொண்டிருப்பவர்களே இப்பருவத்தினர்தான்


"வாழக்கல்" என்பது சான்றோர் வாக்கு இவ்வாறு வாழ்ந்து முடித்த இந்த பருவத்தினர் பற்றி நாம் கண் கொண்டு நோக்குவது அவசியமாகும். அதுமட்டுமன்றி இவர்கள் வாழ்வில் இவர்கள் அடையும் துன்பங்கள் அதனால் இவர்கள் மனதில் ஏற்படும் உளவியல் ரீதியான தாக்கங்கங்கள் என்னவென ஆராய்வதும், இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். அத்துடன் இவர்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை அகற்றி அவர்தம் வாழ்வில் பெரும் சுடர் ஏற்றுவதும் எம் இளைய தலைமுறையினரின் பொறுப்பாகும்.

முதியவர்கள் வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர்கள் என்ற வகையில் முதன்மை பெறுகின்றனர். அதுமட்டுமன்றி இப்பருவத்தில் பிரதான தேவையாக ஓய்வு,அன்பு,பர ாமரிப்பு, சுயமதிப்பு, கௌரவம் என்பவற்றை எதிர்பாக்கின்றனர்.

இன்றைய காலநிலையில் இவர்கள் எம்சமூகத்தினரிடையே பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேற்கூறப்பட்ட விடயங்களும் தேவைகளும் இவர்களுக்கு கிடைப்பதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இதற்கு சான்றாக இன்று எமது நாடுகளிலும், எம்மைச்சார்ந்த நாடுகளிலும் பெருவாரியாக உருவாகி வரும் முதியோர் இல்லங்கள் முதியோர், பராமரிப்பு நிலையங்கள் "ஆதுலர் சாலைகள்" என்பவற்றை சான்றாக காட்டமுடியும்



இன்று இந்நிலை உருவாக என்ன காரணம் என்று நோக்குகின்ற போது இன்றைய இளம் தலைமுறையினர் பெரியவர்களை தமக்குச்சுமையாக மதிக்கின்றனர். அதுமட்டுமின்றி அவர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றாது விடுகின்றனர். இதற்கான அடிமட்டக் காரணம் என்னவெனில் முறையான தொடர்பாடல் இன்மை புரிந்துணர்வுத்தன்மை குறைவு, மனிதாபிமானம் இல்லாமை போன்ற பழக்கங்கள் இன்றைய



வாழும் சமூகத்தினரை ஆட்கொண்டு விட்டது என்றே கூறலாம். இந்த இராட்சத குணங்கள் எம்மவரிடையே தலைதூக்க காரணம் நாகரிக வளர்ச்சி என்ற பேரில் ஊடுருவியுள்ள மேலைத்தேய கலாசார முறையாகும்.

இந்த கலாசார சீர்கேடு காரணமாக மக்கள் தம் வாழ்க்கையில் தமது பெற்றோர்களையும் தமது மூத்த பெரியோர்களையும் மதிக்காது அவர்களை அவமானம் செய்கின்றதை நாம் காணலாம். இதுவே இன்று முதியோர்கள் வாழ்க்கையினை பாரிய இடர்பாடுகளுக்குள் தள்ளிவிடுகின்றது. இந்த நிலை எமது நாடுகளில் மேற்கத்தேய நாடுகளிலும் இந்த நிலை பரவியுள்ளது. இந்த நிலையை வளரவிடாது அவற்றினை தடுத்து அவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டியது எமது பொறுப்பாகும். இது தொடர்பாக எம்மவரிடம் விழிப்புணர்வு காணப்பட வேண்டும். என்பது எனதும் என்னைச்சார்ந்த சமூகத்தினதும் வேண்டுகோளாகும்.

முதியோர்தான் எமது கடவுள்கள் எனப் போற்றுகின்ற நிலை உருவாக வேண்டும். இதற்கு பல சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசும் அதுசார்ந்த தனிப்பட்ட நிறுவனங்களும் பல முயற்சிகளை எடுக்க வேண்டும். என்றும் எடுத்துக் கொண்டும் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இன்று நாடுதழுவிய ரீதியில், சர்வதேசரீதிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்பது ஓரளவு மனதுக்கு ஆறுதலான விடயமாகும்.

அந்த வகையில் இன்று முதியோர்கள் உரிமை தொடர்பான விடயம் ஐ.நா. சபையினால் முன்வைகப்பட்டது. இது 1991ம் ஆண்டளவில் "முதியோர் உரிமைகள் சமவாயம்" என்ற பெயரில் ஒரு செயற்பாட்டு கோவைவயாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இன்று முதியோர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஓரளவு குறைத்துக் கொள்ள முடியும் என்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இது போன்று பல அரச நிறுவனங்களும் தனியார் சமூக நலஅமைப்புக்களும் முதியோர் நலனில் அக்கறையுடன் செயற்படுகின்றன.

இதுமட்டுமன்றி எமது அரசியல் யாப்பில் 10-17ம் உறுப்புரையில் மனித உரிமைகள் பற்றிய விடயத்தில் முதியோர் நலன் தொடர்பான விடயங்கள் காணப்படுவது முதியோர் பிரச்சினையை தீர்க்க சட்ட ரீதியான ஒரு வழியாகும்.

"பெரியாரோடியத்த தொடர்விடுதல் இன்னா" என இன்னா நாற்பது என்ற நூலில் கூறப்படுகிறது. இதன் மூலம் பெரியோர்கள் சமூகத்தில் மதிப்பிற்குரியவர்கள் அவர்களுடன் நல்லுறவை பேணுவதன் மூலம் நாம் பல அரிய தகவல்களை பெறலாம். என்பது இதன் கருத்தாகும். சில இளம் தலைமுறையினர் சில பெற்றோரை மதிக்காமை கருத்துக்களை உதாசீனப்படுத்துதல் போன்ற இழிவான செயல்களை செய்கின்றனர். இவர்கள் பிற்காலத்தில் தமக்கும் தமது பிள்ளைகளால் இவ்வாறான நிலை ஏற்படும் என்பதை அறிய வில்லை போலும். இந்த நிலமை தொடர்ந்தால் அதே நிலமை தனக்கும் ஏற்படும் என்பதை இக்காலத்து இளைஞர்கள் யுவதிகள் உணரத்தலைப்பட வேண்டும்.

முதியோர்களை நினைவுபடுத்தும் முகமாகவும் மதிப்பு வழங்கும் முகமாகவும் 01.10அன்று உலக முதியோர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. "காலங்கள் மாறலாம் கரையோடிப் போகலாம் மாற்றங்கள் வந்தும் மாறாதது இந்த மனிதம் மட்டுமே"என்ற பாடலடிகளின் மூலம் முதியோர் தொடர்பான உரிமைகளை மனித மனங்களில் நாம் ஆழப்பதிப்பதன் மூலமே அவர்களது உரிமையை நாம் பாதுகாக்க முடியும் என்பது பொது முடிவு.

"ஆண்டவனைப் பணி அன்றில் உமது ஆன்றோரைப் பணி" என்பது சான்றோர் வாக்கு என்பதன் மூலம் சமூகத்தில் முதியவர்கள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது. அவர்கள் ஒவ்வொருவரும் சமூகம் எனும் கட்டிடத்தின் அத்திவாரம் என்பதை மறந்து விடாது முதியோர் வாழ்வை ஒளிமயமாக்குவோம்.

ஒரு மரத்திற்கும் வீட்டிற்கும் ஆணிவேரும் அத்திவாரமும் எவ்வளவு அவசியம் என்பது அனைவருக்கும் தெரிவதில்லை. அவை மண்ணுக்குள் மறைந்திருந்தாலும் அவற்றின் பங்களிப்பு இன்றியமையாதது. இது போன்றே எம் மூதாதையரான முதியவரின் பங்களிப்பு எமது சமூகத்திற்க இன்றியமையாதது. இவர்கள் தற்பொழுது பலம் இழந்திருந்தாலும் எமது சமூகத்தின் வழக்காறுகள், மரபுகள் என்பவற்றின் பிறப்பிடமாகவுள்ளவர்கள் . இதனை கருத்திற் கொண்டு சமூகத்தில் பெரும்பாலானவர்கள் முதியவர்களை போற்றிப்பாதுகாத்து அவர்கள் வாழ்வை மகிழ்ச்சி எனும் ஒளிச்சுடர் ஏற்றி வாழ வைப்போமாக.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# பிள்ளை ....மனம்



பள்ளி சென்று

கற்க வேண்டும் என் பிள்ளை

அள்ளி அணைத்தாள் அன்னை!

முள்ளிலே அவன் விழாமல்

தன்னையே செருப்பாக்கி

தன் பிள்ளை காத்தாள்!



கள்ளத்தனம் ஒளிக்க

சொல்லிக் கொடுத்தாள்!

அவள்தான் எங்கள் அன்னை!

**- ச. சலோஜா -**

**சுங்காங் கேணி-இளந்தளிர் சிறுவர் கழகம்**

# குழந்தைக் கல்வி


- திருமதி .ஹேமலதா ஜேசுரெட்ணம்-
கோறளைப்பற்று முன்பள்ளி இணைப்பாளர்

முன்பள்ளி குழந்தைகள் பொதுவாக 3-5 வயது குழந்தைகளையே முடுன்வைக்கலாம் இவர்களின் கல்வியில் ஆரம்ப காலத்தில் கல்வியியலாளர்கள் மிகவும் அக்கறையுடன் கானப்பட்டனர் "நன்கு பண்படுத்தப்பட்ட நிலத்தில் வளரும் பயிர் நிறைந்த பயனைக் கொடுக்கும் அதற்கு பண்பும், அன்பும் ஊக்கவிருத்தியும் உள்ள சூழல் அமைய வேண்டும். இவ்வாறு அமையும் போது சிறு குழந்தைகள் எதிர்கால சிற்பிகளாக மாற முடியும். இதற்கு உதாரணமாக விளையாட்டு பூங்காக்களை அமைத்து கல்வியியலாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்கு செலுத்தி வந்தனர்.

இவர்களின் விருத்தியில் அறிவு திறன், மனப்பாங்கு, ஆக்கவேலை, விளையாட்டு, பேரியக்கவிருத்தி, நுண்ணணியக்கவிருத்தி, சமூக மனவெழுச்சி விருத்தி, சுகாதாரம், போசாக்கு, அழகியல், சிறுவர் உரிமை போன்றவை குழந்தைக் கல்வியில் உள்ளடக்கப்பட்டவையாக கல்வியை மேம்படுத்தும் போது சிறப்பான கல்வியை கொண்டு செல்ல முடியும்.

இதற்கு பெற்றோர்களின் பங்களிப்பு முக்கியமான பங்கை எடுக்க வேண்டும். இதில் மரியா மொன்டிசோரி அம்மையார் முன்மாதிரியாக காணப்படுகிறார். தாயின் மடியே முதன் கல்விக்கூடமாக உள்ளது. அதன் பின்னரே முன்பள்ளிக்கு வருகின்றனர். பெற்றோர்கள் பிள்ளையின் கற்றலில் மிகவும் பங்குடையவர்களாகின்றனர்.

குழந்தைகளில் கற்றல் விளையாட்டுடன் அமைய வேண்டும் என்ற கருத்தை தற்போது பெற்றோரிடம் பெரிய கேள்வியாக அமைகின்றது. தற்போதைய பெற்றோர் குழந்தைகளை பெரிய கல்விமானாக மாற்ற வேண்டும், என்று குறித்த வயதில் செய்யும் செயற்பாடுகளை தவிர்த்து, எழுத்து வேலையும் வாசிப்பும் என்று அவர்கள் மூளையில் ஏற்கும் விடயங்களை அதிகமான அழுத்தத்தை கொடுத்து, கல்வியில் அவர்களின் வயதில் ஏற்றுக் கொள்ளும் விடயத்தில் சலிப்பை ஏற்படுத்துகின்றனர். இங்கு அவர்களின் உரிமையும் பறிக்கப்படபடுக்கின்றது. 3-5 வயது வரையும் அதிக அழுத்தம் கொடுப்பது "குருவித்தலையில் பனங்காய்



வைப்பது போல்" ஆகிவிடுகின்றது. இதை பெற்றோரே அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

இவ்வாறான கருத்துக்களுடன் அடுத்ததாக ஆசிரியர்களையும் எடுத்துக் கொள்ளும் போது கல்வியில் அதிகம் கவனமாக செயல் புரிய வேண்டும் கடமை கண்ணியம் கட்டுப்பாடுடன் கடமைபுரியும் போது, ஆசிரியர்கள் பிள்ளையின் கற்றல் அணுகுமுறையில் திறவுகோல். இவர்கள் எப்போதும் கவர்ச்சியானதும்,மிகவும் விரும்பத்தக்கதுமான பல்வேறு சூழலை அமைத்து குழந்தையை ஆராய்ச்சியில் ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு அர்ப்பணிப்பும் பொறுமையும் கூறிய நுண்ணறிவும் உடைய ஆசிரியர்கள். இவர்கள் எப்போதும் குழந்தையின் பெற்றோராகவும் நல்ல வழிகாட்டியாகவும் செயற்படும் போது சிறந்த எதிர்கால சமுதாயத்தை கட்டி எழுப்ப முடியும்.

எனவே எமது கோறளைப்பற்று பிரதேசத்தில் சுமார் 32 முன் பள்ளிகளிலும் இவ்வாறான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி முன்பள்ளி நடாத்துவதில் கல்வித் திணைக்களம், பிரதேச செயலகம், சிறுவர் நன்நடத்தைப்பிரிவு போன்றவை மிகவும் அக்கறையுடன் கடமை ஆற்றி வருவதில் எவ்வித ஐயமும் இல்லை. இதில் சிறுவர் தினத்தை முன்னிட்டு அனைத்து சிறுவர் உரிமைக்கும் மதிப்பளித்த பிரதேச செயலகத்துக்கு பாராட்டுக்கள் உரியது. குழந்தை கல்வியை எல்லோரும் சரியாக வழிநடாத்த உழைக்க வேண்டும்.


# தலைமைத்துவம்



நேற்றைய சிறுவனாய் நீ
இன்றைய இளைஞனாய் நீ
நாளைய தலைவனாய் நீ
நாட்டை நல்வழிகாட்டவே !

கடமையில் தலைமை கலங்கரை விளக்கு
கருத்திலே தலைமை கூரிய கத்தி
உறுதியில் தலைமை உயர் பெரு இமயம்
உள்ளத்தில் தலைமை வெண்பனிச்சிகரம்.

கொள்கையில் குறியாய் குணத்தில் உயர்வாய்
முயற்சியில் முதன்மையாய் செயலினில் ஒழுங்காய்
வாழ்வினின் விளக்காய் நீதியின் உருவாய்
நிகழ்வதே உண்மையான தலைமை!




ஜோ.ஜோய்

கருவாக்கேணி-ஒளிவீச்சு சிறுவர் கழகம்

# நாளைய தலைவர்களான எமது சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்போம்!

**சு.விக்னேஸ்வரன்** (BA,MA)
நன்னடத்தை உத்தியோகத்தர்.வாழைச்சேனை



ஐக்கிய நாடுகள் சாசனத்தில் 18 வயதிற்குட்பட்ட அனைத்து மனிதப் பிறவிகளும் சிறுவர் என்ற வரையறைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள், என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் இச்சாசனம் ஒவ்வொரு நாடும் தமது நாட்டில் வெவ்வேறான வயதமைப்பை வைத்திருப்பதற்கு அனுமதிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் என்றதும் அவர்களது உணர்வுகள் விருப்பு வெறுப்புக்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துவதில் தவறி விடுகிறோம். சிறுவர்களுக்கும் உணர்வுகள் விருப்பு வெறுப்புக்கள் உண்டு அவற்றிற்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும் என்பது எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

இன்றைய மனித சூழலில் நம்மைச்சுற்றி சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற எத்தனையோ துஷ்பிரயோகங்களைப்பற்றி நாம் கேள்விப்படுகின்றோம். ஆகவே இத்திய செயற்பாடுகளினால் நம் சூழலில் வாழும் பிஞ்சுக்குழந்தைகள் துஷ்பிர யோகம் எனும் வஞ்சகப்பொறியினால்.அகப்பட்டு உடல் உள ரீதியாக எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் நாம் ஏன் இதற்கெதிராக செயற்பட வேண்டும் என சற்று சிந்தித்த போது இச்சிறிய படைப்பின் மூலமாவது ஏதாவது பயனுள்ள விடயத்தை சொல்ல வேண்டும் என்று சிந்தையில் தோன்றியது அவற்றின் சில விடயங்களை இப்படைப்பின்மூலம் எடுத்துறைக்க விரும்புகின்றேன்.

## சிறுவர்களுக்கெதிரான பொதுவான குற்றங்கள்/ துஷ்பிரயோகங்கள்

### 01. சிறுவர்களுக் கெதிரான உடலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள்.

18 வயதுக்கு கீழ்பட்ட சிறுவர்களை எவராவது வேண்டுமென்றே அல்லது பாதுகாப்பில் வைத்திருக்கும் போது சிறுவனை / சிறுமியை தாக்குதல், கொடுமைப்படுத்தல் ,புறக்கணித்தல் கைவிடல் அல்லது உடலுறுப்புக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தல் போன்றவற்றை துஷ்பிரயோகங்களாக வகைப்படுத்தலாம். ஆகவே இவ்வகை துஷ்பிரயோகத்தால் சிறுவர்கள் தமது உடல் உறுப்புக்களை இலக்கலாம் அல்லது அவை செயற்படாத நிலைக்கு தள்ளப்படலாம்.

### 02. சிறுவர்களுக் கெதிரான பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள்.

பொதுவாக சிறுவர்களுக்கெதிராக பாலியல் ரீதியில் புரியப்படும் மோசமான துஷ்பிரயோகங்களால் சிறுவர்கள் பல்வேறு உடலியல் ஊறுகட்கும், உளவியல் தாக்கங்களிற்கும் உள்ளானகின்றனர். இவ்வகையான துஷ்பிரயோகங்கள் பிள்ளைகள் வாழும் குடும்ப அங்கத்தவர், உறவினர் அயலவர் அல்லது பிள்ளைக்கு நெருக்கமானவர்கள் போன்றோரால் புரியப்படுகின்றன என்பதை கடந்த கால சம்பவங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.



குறிப்பாக சிறுவர்கள் மீது இவ்வகையான துஷ்பிரயோகங்கள் தொடர்ச்சியாக புரியப்படும் போது சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாவதுடன், சிறுவர்கள் பாலியல் ரீதியான தொழில்களில் ஈடுபடுவதற்கான சாத்தியக்கூறுகளை தூண்டுபவையாகவும் அமையலாம். ஆகவே இவற்றிலிருந்து சிறுவர்கள் நிச்சயம் பாதுகாக்கப்பட வேண்டும்.

### 03. சிறுவர் ஆட்கடத்தல்

சிறுவர்கள் பல்வேறு நோக்கங்களுக்காக தமது நாட்டிலிருந்தும் அல்லது சட்டப்படியான பாதுகாப்பிலிருந்தும் சம்மதமோ அல்லது அனுமதியின்றி கடத்தப்படுகிறார்கள். இதன் மூலம் சிறுவர்களின் கல்வி உரிமை குடும்ப சூழலில் வாழும் நிலை போன்றவற்றை வேரறுந்த மரம் போல பிடுங்கப்படுகின்றது. இதன் மூலம் வீதிச்சிறுவர்கள் அதிகரிக்கவும், சீர்கெட்ட சிறுவர் சமுதாயம் உருவாகவும் இவ்வகைச் செயற்பாடுகள் வழிகோருகின்றன என்பது திண்ணம்.

### 04. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்.

14 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களும் கல்வி கற்க வேண்டும் என்பது கட்டாயமான நியதியாகும். ஆனால் இதற்கு மாறாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் சிறுவர்களின் கல்விக்கான உரிமை மீறப்படுகிறது. கல்வி மற்றும் ஒழுக்கம் என்பவற்றை கற்க வேண்டிய சிறுவர்கள் ,வேலைக்கு அமர்த்தப்பட்டு அவர்களது உழைப்பு சுரண்டப்படுகிறது. இதன்மூலம் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்.

பிள்ளைகள் பூப்போன்றவர்கள் . நாம் அவற்றை கசக்கினால் பூவின் அழகும் கெட்டு, நறுமனமும் நீங்குவது போல சிறுவர்களுக்கெதிராக புரியப்படும் துஷ்பிரயோகங்களால் சிறுவர் வாழ்வு அழிந்து நம் எதிர்கால சமூகமும் சிதைந்து விடும். ஆகவே நாம் வாழும் சூழலில் நம்மைச்சுற்றி காணப்படும், சிறுவர்களை ஒவ்வொருவரும் தம் குழந்தையாக நினைத்து அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து உரிமைகளைப் பெற்றுக்

கொடுப்போம். மேலும் கொடூர துஷ்பிரயோகங்களிலிருந்து நம் சிறுவர்களை பாதுகாப்போம். சிறந்த ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சூழலை நம் சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுப்போம். இது குறிப்பாக தனிமனிதனால் செய்ய முடியாது. குறிப்பாக சமூகத்திலுல்ல அனைவரும் இதைப்பற்றி சிந்திக்க வேண்டும். ஆகவே நாமும் "சிறுவர்" எனும் வாழ்வியல் நிலையை கடந்து வந்தவர்கள் என சிந்தித்து, சிறுவர்களுக்கு சிறந்த சூழலை குடும்பம், பாடசாலை மற்றும் சமூகத்தில் கட்டியெழுப்புவோம். சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்போம்.

## சின்னஞ் சிறார்கள்
## அவர்கள் மண்ணின் மணிகள்



நேயமே!மனித நேயமே!
தீபமே! சிறுவர் தீபமே!
கண்ணிமைக்கும் நொடிப் பொழுது
சிறுவர் சிரிப்பு தோன்றும் கணப் பொழுது.

இயற்கை அழகு அது இலங்கையின் முத்து
சின்னஞ் சிறார்கள் அவர்கள் நம் மண்ணின் நட்பு
இலங்கை நாட்டில் வேண்டும் சிறுவர்களுக்கு ஓர் இடம்
அதனால் பின் அடையும் இலங்கை உயர்விடம்

பாடித்திரியும் பைங்கிளிகள்
பல கதைகள் கூறும் நல் நதிகள்
சிறுவரின் பெரும் மகிழ்ச்சி - அது
இலங்கை நாட்டின் பாரிய வளர்ச்சி

சிறுவரை மதிப்பது உயரியதே
அதனால் எமக்கு என்றும் இன்பமே
நம் சிறுவரின் முத்துப் பேச்சு
நம் இலங்கையின் சொத்துப் போல

வழக்கை வெற்றி கொள்ள வேண்டும் - வாய்மை
நம் வாழ்வில் வளம் பெற வேண்டும் தூய்மை
கருவினை தாய் காப்பது போல்
நம் சிறுவரை நாம் காப்போம்

ஜெ.ஜெக்சார்
மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரி



# சிறுவர்களுக்கு உதவுவது எப்படி?

**P. பிரபாகரன்**
**வெளிக்கள உத்தியோகத்தர்**
**எஸ்கோ**



மனநலத்துறையில் சிறுவர் என்போர் தங்கியிருப்போராவர். வயது வந்தோர் என்பது சுயாதீன நபர்களாகும். சுயாதீன நிலை என்பது சுயமாகச் சிந்திப்பதற்கும், முடிவெடுப்பதற்கும், செயற்படுவதற்கும் இயலுமாக இருத்தலை குறிக்கும். சிறுவர்கள் தங்கியிருப்போர் என்பதனால் அவர்களுக்கு அரவணைப்பு தேவைப்படுகின்றது. சிறுவர்கள் வயது வந்தோர் நிலைக்கு மாற வேண்டுமாயின் அவர்கள் தங்கியிருக்கும் மன நிலையிலிருந்து சுயாதீனமாகச் சிந்தித்து செயற்படும் நிலைக்கு வளர்ச்சி அடைய வேண்டும் அந்த மாற்றத்திற்கான காலம் "சிறுவர் காலம்" என்று கொள்ளப்படுகின்றது.

பிறப்பிலேயே மனிதக் குழந்தை என்பது முழுமையாக தங்கியிருக்கும் குழந்தையாகும். அக்குழந்தையை பிறந்த ஒரு மணித்தியாலத்திற்குள் கவனிக்காவிட்டால் அந்த குழந்தை மரணிக்கக் கூடும். பிறந்த நாள் முதல் குழந்தை சீரான வளர்ச்சியினை எய்துகின்றது. அந்த வளர்ச்சி நிலை குழந்தைப்பருவம் ஆரம்ப பாடசாலைப்பருவம், இளமைப்பருவம் என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அனைத்து நிலைகளும் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி சுயாதீன மட்டத்தினை அடையும் நிலையைக் குறிக்கின்றது. விலங்குகளில் அதிக குழந்தைப்பருவத்தைக் கொண்டது மனிதக்குழந்தைப் பருவமாகும். இது கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாகும். சில விலங்குகளின் குழந்தைகள் பிறந்தவுடனேயே சுயாதீனமடைந்து விடுகின்றன. மீன்கள் அதற்கு சிறந்த உதாரணங்களாகும்.



மனிதர்களின் குழந்தைகள் குழந்தைப்பருவத்திலிருந்து வயது வந்தோராக வளர்ச்சி பெறுவதற்கான காலப்பகுதி அதிகமாக இருப்பதற்கான காரணம், அந்த இடைப்பட்ட காலத்தில் கற்பதற்கு அதிகம் இருப்பதனாலாகும். மனிதக்குழந்தையின் இளமைப் பருவம் அதிகம் என்பதனால் அவர்களினால் நிகழ்த்தப்படும் தவறுகளுக்கான வாய்ப்புகளும் அதிகமாகும். இந்த வளர்ச்சி நிலை கிரமமாக அமையவில்லை ஆயின் அது அவர்களின் வளர்ச்சி நிலையையும் பாதிக்கும்.

சிறுவர் பராயத்தில் சிறந்த மன நிலை வளர்ச்சி இல்லாவிடின் வயது வந்த நிலையில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். வயது வந்த காலத்தில் ஏற்படும் பல மனப் பாதிப்புக்களுக்கு காரணம் சிறுவர் பராயத்தில் ஏற்படும் தாக்கங்களாகும். அதனால் சிறுவர்களின் மனநலன் சிறந்ததாக இருப்பது அந்த காலப்பகுதிக்கு மட்டும் அன்றி முழு வாழ்க்கைக்கும் உகந்ததாகும். அதனால் சிறுவர்களின் ஆரோக்கியமான மன நிலை வளர்ச்சிக்கு எப்படி உதவலாம் என்பது குறித்து யாவரும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

சிறுவரின் மன நலன் வளர்ச்சி நிலைக்கு அவசியமான பின்னணிக் காரணிகள் நான்கு உள்ளன.

1. அரவணைப்பினை வழங்கும் பெரியோரின் அன்பு, ஆதரவு மற்றும் எதிர் வினையுடனான தொடர்பு நிலைகள்.

குழந்தைகளுக்கு பெற்றோர்களிடமிருந்து கிடைக்கும் அன்பு மற்றும் அரவணைப்பின் பலமானது அந்த குழந்தைக்கு வாழ்க்கையைப் பற்றிய நம்பகத்தன்மையையும், பிறருடனான தொடர்பினை பேணிக் கொள்ளவும் பல அனுபவங்களை சந்திக்க, வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளவும் என்று பலதரப்பட்ட விடயங்களை வெற்றிகரமாக சந்திக்கும் திறனை ஏற்படுத்துகின்றது.

ஒரு பிள்ளை மீது அந்தந்த வயதிற்கேற்ப நாம் அன்பு செலுத்த வேண்டும். குழந்தையாயின் அன்பாக பேசுதல், செல்லம், கொஞ்சுதல் அணைத்துக் கொள்ளுதல், சிரித்தல், தாய்ப்பால் வழங்குதல், அக்கறை காட்டுதல் ஆகிய நடவடிக்கைகளில் அன்பை வெளிக்காட்ட முடியும். 10-12 வயது பிள்ளை களாயின் அவர்களின் தேவைகளை அறிந்து அத்தேவைகளை நிறைவேற்ற முயற்சிப்பதனூடாக அவர்களின் மனதைப் புரிந்து கொண்டு நடந்து கொள்வதினூடாக அன்பு செலுத்த முடியும்.

அரவணைப்பு என்பது பெரியோர்களினால் பிள்ளைகளுக்கு கிடை க்கும் பாதுகாப்பாகும். பிள்ளைகளுடன் இணைந்து வாழ்வதினால் பிள்ளையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியும். வறுமை காரணமாக வேறு பிரதேசங்களுக்கு மற்றும் நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்று செல்வதினாலும், இயற்கை மற்றும் யுத்தம் காரணமான இடப் பெயர்வுகள், மரணம் என்பன காரணமாகவும் பெற்றோர்களினால் பிள்ளைகளுடன் இணைந்து வாழ முடியாத நிலை ஏற்படுகின்றது. மேற்கூறப்பட்ட விடயங்களை முடிந்தவரை கட்டுப்படுத்தி பிள்ளைகளுடன் இணைந்து வாழ பெற்றோர்கள் முனைதல் அவசியமாகும். பெற்றோர்களுக்கிடையிலான சண்டை, சச்சரவுகள், பிணக்குகள் ஏற்படுவது பிள்ளைகளின் மனதில் பாதுகாப்பற்ற உணர்வினை உருவாக்கும். அதனால் பிள்ளைகளின் மனநிலையினைக் கருத்திற் கொண்டு பெற்றோர்கள் தமது துர்நடத்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

2. சிறந்த ஆரோக்கிய தேவைகளை நிறைவேற்றுதல்.

பிள்ளையின் ஆரோக்கிய நிலையினைப் பேணுதல். இதன் அர்த்தமாகக் கொள்ளப்படும். பிள்ளையை ஆரோக்கியமாக வைத்திருத்தல். உடலுக்கு மட்டுமன்றி மனதுக்கும் சுகமளிப்பதாகவே அமையும். ஆரம்ப கட்ட ஆரோக்கிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகும். சுத்தமாக வாழ்தல். தரமான உணவுகளை மற்றும் சுத்தமான குடிநீரை வழங்குதல். தடுப்பூசிகள் சுகவீனத்தின் போது சரியான சிகிச்சை அளித்தல், சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தல். விபத்துக்களில் இருந்து பிள்ளைகளை பாதுகாத்தல் என்பன இதில் அடங்கும். இவற்றினை நிறைவேற்றுவதினூடாகப் பிள்ளைகளின் ஆரோக்கிய நிலையைக் கடைப்பிடிக்க முடியும்.

3. வாழ்க்கை அனுபவங்களில் பாடம் கற்க இடமளித்தல்.

பிள்ளைகளின் தேவைகள் அனைத்தையும் பெற்றோர்கள் நிறைவேற்றுவதனை விட அவர்களின் அனுபவங்களில் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடிந்தவரை இடமளிப்பது பிள்ளைகள் பலவற்றை கற்பதற்கு உதவியாக அமையும்.

வாசிக்கவும் எழுதவும் பிள்ளைகளை பழக்கப்படுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு அதற்கான முன்னுதாரணத்தை பெற்றோர்களே வழங்க வேண்டும்.

வீட்டு செயற்பாடுகளில் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்வது அவர்களுக்கு புதிய அனுபவங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு வழி ஏற்படுத்தும்.

பிள்ளைகளை சமூகத்துடன் பழக விடுதல் அவர்களுக்கு பல அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க வழியேற்படுத்துதம்.

சூழலை அனுபவிக்க பழகுதல்.அவர்களின் வாழ்க்கைக்கு அவசியமான விடயமாக அமையும்.

குடும்பத்தில் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளில் பிள்ளைகளையும் பங்குபெறச் செய்ய வேண்டும். இதனால் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சி அடையும் குடும்பத்தில் தாமும் முக்கியமான நபர் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும்.


**4.தன்னம்பிக்கையைன் கட்டியெழுப்ப சந்தர்ப்பமளித்தல்.**

பிள்ளை தனது முக்கியத்துவத்தைப் பற்றி விளங்கிக் கொள்வதனால் தன்நம்பிக்கை வளர்கின்றது. தமது பெற்றோருக்கு பாடசாலைக்கு, நண்பர்களுக்கு மற்றும் பெரியோர்களுக்கு தாம் எவ்வளவு தூரம் முக்கியமானவர் என்பது உணரப்படும் போது அவர்களுக்கு தன்னம்பிக்கை நிலை அதிகரிக்கின்றது. பாராட்டுதலானது தன்னம்பிக்கை நிலையை வளர்க்கும் செயலாகும். பிள்ளைகள் செய்யும் வேலையை பாராட்டுவதற்கு அவர்கள் அதிகம் விரும்பும் நபர்களை ஈடுபடுத்துவது அவசியமாகும். பாடசாலை, ஆசிரியர்கள், மதிப்பிற்குரிய பெரியவர்கள், மதத்தலைவர்கள் ஆகியோர் இவ்வாறான நபர்களாக இருக்க முடியும். பாராட்டும் செயற்பாடு பகிரங்கமானதாகவும், பொதுவானதாகவும் இருக்க வேண்டும். பிள்ளைகளை தனித்து பாராட்டுவதை விட குடும்பத்தினர் முன்னிலையில், பாடசாலை வகுப்பு முன்னிலையில், பாடசாலை கூட்டத்திற்கு முன்னிலையில்,வேறு சமூக நிகழ்வுகள் முன்னிலையில் பாராட்டப்படுவதனால் அவர்களின் தன்னம்பிக்கை நிலை மேலும் அதிகரிக்கும்.

பிள்ளைகள் தவறு ஒன்றினை செய்திருந்தால், அத்தவறினை காரணம் காட்டி செய்யப்படும் நல்ல காரியங்களை நிறுத்தி விடக் கூடாது. அவர்கள் செய்யும் நல்ல வேலைகளையும் முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் வரவேற்க வேண்டும். பிள்ளைகளினால் எல்லா சந்தர்ப்பங்களிலும் வெற்றி அடைய முடியாது சில பிள்ளைகள் எல்லாக் காரியத்தினையும் வெற்றிகரமாக செய்யமாட்டார்கள். அதனால் வெற்றி என்பதினை விட பங்குபற்றுதல் அதற்கான உற்சாகம் என்பவற்றை வரவேற்க வேண்டும். அதுதான் முக்கியம் என்பதனை விளங்கப்படுத்துங்கள்.

ஊக்கு விப்பு பிள்ளைகளின் தன்னம்பிக்கையை வளர்க்கும் இன்னொரு காரணியாகும். பாராட்டு என்பது வெற்றியுடன் தொடர்பு பட்டது என்பதனால் ஊக்குவிப்பது பெரியோர்களுக்கு இலகுவான காரியமாகும். வெற்றி பெற்றவர்கள் தோல்வி அடைந்தவர்கள், போட்டியில் பங்கு பற்றியவர்கள் பற்றியும் கூறி பிள்ளைகளை ஊக்கு விக்க முடியும்.

குடும்பத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதனால் அவர்களின் கருத்துக்களை முன்னிலை படுத்துவதினூடாக குடும்பத்தில் தானும் முக்கிய உறுப்பினர் என்ற தன்னம்பிக்கை அவர்களிடத்தில் வளர பெற்றோர்கள் உதவ வேண்டும்.



# குருட்டுச் சிறுமி

"ஆண்டாரே ஆண்டாரே
எங்க எங்கே போறா?
கம்பு வெட்டப் போறேன்
கம்பு என்னத்திற்கு?
காலை அடைக்க
காலை என்னத்திற்கு?
மாடு கட்ட
மாடு என்னத்திற்கு?
சாணி போட
சாணி என்னத்திற்கு?
வீடு மெழுக
வீடு என்னத்திற்கு?
புள்ளப் பெற
புள்ள என்னத்திற்கு?
பள்ளிக் குடத்தில் வெச்சிப்படிக்க....?

**-கலாபூஷணம் தாழை செல்வநாயகம்-**

இரவு நேரத்தில் நில வெறிக்கும் வேளையில் அவள் தனது அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருப்பாள். மகளுக்கு அம்மா இப்பாடலைப் பாடிக் காண்பித்துக் கொண்டிருப்பாள். வானொலியோ தொலைக்காட்சியோ இல்லாத காலமது. "காகமும் வடையும்" என்ற கதையினை அம்மா கூறக்கேட்டு அதனை நம்பி விடுவாள். நரிபாடச் சொல்லியது. காகம் பாடியது எல்லாம் உண்மையான சம்பவங்கள் என்பது அவளது எண்ணம்.

தண்ணீர் தேடியலைந்த ஒரு காகம் குடத்திற்குள் சொற்ப நீர் மாத்திரம் கிடப்பதனைக்கண்டு சிறு கற்களை தேடிப்பொறுக்கி வந்ததும் நீர் மேலே வந்ததும் தாகம் தீர்ந்தது போன்ற கதையும் அவளுக்கு உண்மையாகவே இருந்தது.

நூறு வருட காலங்களாக சிறுவர் படிக்கும் நூல்களில் அதே கதைகள்தான் இன்று வரையிலும் இருந்து வருகின்றன.

எனது பேரனிடம் காகத்தின் கதைகள் இரண்டினையும் நான் கூறி முடித்ததும்
"அப்புச்சி ! இரண்டு காகமும் ஒரே காகமா? இல்லாட்டி வேற வேற காகங்களா?"
என்று கேட்டு விட்டான்

அவள் வாழ்ந்த காலம் வேறு இவன் வாழுகின்ற காலம் வேறு.

அது ஒரு விவசாயக் கிராமம் அங்குள்ள போடியார் வீட்டுப் பெண்தான் அந்தக் குருட்டுச் சிறுமி. அங்கவை தான் அவளது பெயர் "பொட்டக்கண்ணி" என்பது தான் அந்தக் கிராமத்தில் அவளுக்க சூட்டப்பட்ட பட்டப் பெயர்.

கண் ஒன்றினை விட வேறு ஒரு குறையும் அவளிடம் காணப்படவில்லை. வலது கண் பூத்துப் போய் விட்டது. அதே போன்று பன்னிரண்டு வயதிலும் அவள் பூப்படைந்து விட்டாள்.

அக்கிராமத்தின் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் போதே வயதிற்கு வந்து விட்டாள். பெற்றோர் அவளை அதற்கு மேல் படிக்க விடாது தடுத்து விட்டனர்.

பெண்பிள்ளைகள் கையெழுத்து போடுவதற்கு மாத்திரம் படித்தால் போதுமானது. என்பது அவர்களது எண்ணம்.

"அங்கவை" தாயின் வயிற்றில் கருவாகியிருந்த போது சூரியகிராணத்திலன்று அவளது தாய் தெரியாத்தனமாக மீன் வெட்டியதால்தான் அவளுக்கு ஒரு கண் குருடாகியது என்பது அவ்வூரவரின் கதையாகிவிட்டது.

ஒரு கண் பார்வையில்லாதிருப்பது அவளுக்கு பெரிய சுமையாகத் தெரியவில்லை.

சுருண்ட கேசம். அளவுக்கு மீறிய அங்கங்கள். ஐந்தடிக்கு மேல் உயரம் இத்தனையும் சேர்ந்து அக்கிராமத்தின் அழகியாகவிருந்தாள். குருட்டு பெண் என்றாலும் அக்கிராமத்து வாலிபர்களுக்கு அவள் மேல் ஒரு கண். போடியாரின் வீட்டுப்பிள்ளை என்பது அவளுக்கு கிடைத்த தனி அந்தஸ்து

தனது தோழிமார்களுடன் காட்டில் உள்ள காரப்பழம்,சூரம் பழம்,நால்பழம்,ஈச்சம் பழம் ஆகியவற்றைப்பறித்து உண்பது அவளது பொழுது போக்காகிவிட்டது. பழங்கள் பழுக்காத காலப்பகுதியில் தனது வீட்டு முற்றத்து வேப்பை மரத்தில் போடப்பட்டுள்ள ஊஞ்சலில் தனது தோழிமார்களுடன் சேர்ந்து "ஊஞ்சல் பாட்டுப்பாடி பொழுது போக்குவாள்.

"ஆதவன்" பக்கத்தில் உள்ள பட்டினத்துச் செல்வந்தன் ஒருவனின் மகன்.அவனது தந்தையாரின் விவசாய நிலம் அவளது கிராமத்தில் தான் உள்ளது.

வயல் உழவு வேலைகள் ஆரம்பித்து விட்டால் அறுவடை காலம் முடியும் மட்டிலும் ஆதவனை நாளாந்தம் இக்கிராமத்தில் காணலாம். தான் ஒரு படித்தவன் என்ற செருக்கு அவனுக்கிருந்தது. அதனால் அவன் அக்கிராமத்து இளைஞர்களுடன் கதைக்க மாட்டான். சேரவும் மாட்டான். ஆனால் அங்கவை மேல் மாத்திரம் அவனுக்கு ஒருகண். அவள் குருடியாக விருந்த போதிலும் பேரழகியான அவள்மேல் அலாதியான தொரு பிரியம் வைத்திருந்தான். தாகம் என்று சொல்லி அவள் வீட்டிற்கு சென்று தண்ணீர் கேட்பான். அவளும் மனம் கோணாமல் செம்பினைப்பூசிக்கழுவி தண்ணீர் கொண்டு போய் அவனுக்குக் கொடுப்பாள் . அவன் பதினெட்டு வயது வாலிபன். ஆனால் காதலிக்கும் பக்குவம் அவளுக்கு இன்னும் ஏற்படவில்லை. என்றாலும் அவனைக் கடைக்க ண்ணால் ஒரு பார்வை பார்த்து சாடை மாடையாய் புன்னகைத்துக் கொள்வாள்.



ஒரு நாள் அவளது தகப்பனாரிடம் போடியார் "உனது பெண்ணை பட்டினத்

துக்கு அனுப்பிப் படிக்க வைத்தால் என்ன?" என்று கேட்டு விட்டான். உடன் ஆத்திரம் கொ
போடியார். அவனுக்கு
த்தாறுமாறாய் ஏசிவிட்டார்.

"நீ தொழில் செய்ய வந்தியெண்டா அதமட்டும் கவனி. எங்கட வீ
விஷயத்திலதலையிடாதே..."என்று
நெற்றியில் அடித்தாற்போல் அவனிடம் கூறிவிட்டார்.

அன்றிலிருந்து அவன் அவளது வீட்டிற்கு தண்ணீர் கேட்டுப் போவதில்லை. போடிய
குடும்பத்தின் மீது அவனுக்கு ஒரு விரக்தியும் ஏற்பட்டிருந்தது.

அவளுக்கு அவன் மேல் சிறிது பாசம் ஏற்பட்டிருந்த போதிலும் அவனது போக்கு வே
விதமாயிருந்தது. அவளை எப்படியாவது கெடுத்து பழிவாங்க வேண்டும் எ
எண்ணத்திலிருந்தான்.

வயல் வெளியில் அறுவடைக்காலம் ஆரம்பமாகியிருந்தது. அதனால் வயல்வேல
செய்வர்களின் நடமாட்டமும் அதிகமாயிருந்தது. அன்று பொழுது பற்றைக்கு மேலாக வ
விட்டது. அந்தி சாயும் வேளை நான்கு மணியாவது இருக்கும். அவளது தோழிகள் அ
அவளது வீட்டிற்கு வரவில்லை. அவர்களை நெடுநேரம் பார்த்து விட்டு தனது வீட்டு நாயினை
கூட்டிக் கொண்டு காட்டுப்பக்கமாக கிளம்பினாள். வேளாண்மை வெட்டும் காலத்தில் தான் கா
சூரைப்பழங்கள் பழுக்கும் அவற்றினை பறித்து உண்ணும் ஆவல் மேலிட்டதா
காட்டுப்பகுதியினை நோக்கி கால் போன போக்கில் சென்று கொண்டிருந்தாள்.

விதிவிட்ட வழியில் அவள் கால்களும் சென்று கொண்டிருந்தன

சந்தர்ப்பத்தினை எதிர்பார்த்து கொண்டிருந்த ஆதவனுக்கு பழம் நழுவி பாலில் விழுந்தமா
ஆகிவிட்டது.

அவனது மோக வெறி அவளை சாகடித்து விட்டது. அவள் கூட்டிச் சென்ற நாயும் அவ
சும்மாவிடவில்லை. அவனைக்கடித்துக்குதறிக் குற்றுயிராக்கி விட்டது. அவனுக்கு உயிர் மட்
போகவில்லை.

"பொட்டைக்கண்ணி" காட்டில் பாம்பு கடித்துச் செத்து விட்டாள். என்ற கதை அந்தக்கிராம
முழுதும் பரவியது.

"ஆதவன்"ஆயுள்தண்டனைக்கைதியாகிவிட்டான் .

(இது இன்று நேற்றையக்கதையல்ல............ 50 வருட காலத்திற்கு முற்பட்ட சம்பவம்)

> "சிறுவர் துஷ்பிரயோகம் வாழ்நாள் முழுவதிற்குமான
> நீண்ட பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லது".
>
> -பில்லிஸ் டில்லர்

# சிறுவர் சட்டமும், நீதிமன்ற முறைமையும்

ஏ.சி.ஏ.அஸீஸ்

புலனாய்வு அதிகாரி - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஒரு நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு கொண்டு வரப்பட்ட சர்வதேச பிரகடனங்கள், சமவாயங்கள் மற்றும் தராதரங்கள் என்பன அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் அந்தத் தராதரங்களும், கொள்கைகளும் தேசிய கட்மைப்பிற்கு ஏற்ற வகையில் நியதிச் சட்டங்களாக ஆக்கப்பட்டுள்ளன. சிறுவர்களின் அதி உயர் நலனுக்காகவே சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

### சட்டம் என்பதன் மூலம் நாம் விளங்கிக் கொள்வதென்ன?

இன்றைய கால கட்டத்தில் சட்டம் என்பது நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கின்ற அனைத்து விடயங்களிலும் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது. விதிவிலக்காக எவரும் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. எனவே சமூகத்திலுள்ள அனைவர்களும் சட்டத்தால் கட்டுப்படுகின்றார்கள். சட்டத்தின் முன் யாவரும் சமம்.

### குற்றவியல் சட்டமும், தண்டணைச் சட்டக் கோவையும்

ஒவ்வொரு குற்றவியல் நடவடிக்கையின் தன்மை, அக் குற்றத்தைச் செய்தமையால் குற்றவாளியாக கருதப்படுவதற்கு வழங்க வேண்டிய தண்டனை என்பவற்றை உள்ளடக்கியதும், குற்றவியல் சட்டத்துடன் தொடர்புடையதுமான சட்டக்கோவை ஒன்று உண்டு. அச்சட்டக்கோவை தண்டணைச் சட்டக் கோவை (Penal code) என குறிப்பிடப்படுகின்றது. இத்தண்டனைச் சட்டக் கோவை மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாக இருந்தாலும், பல சீர்திருத்தங்களுக்குட்பட்ட சட்டக் கோவையாகும்.

இலங்கை சிறுவர் சமவாயத்தை அங்கீகரித்த பின்னர், சிறுவர்களுக்கெதிரான குற்றவியல் நடவடிக்கைகளை தடுப்பதன் மூலம், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னரிலும் பார்க்க அக்கறை கொண்டதன் விளைவாக தண்டனைச் சட்டக் கோவை காலத்திற்குப் பொருத்தமான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது.

### 2007ம் ஆண்டின் 56ம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு சட்டம்

பிள்ளையொன்றை முறைகேடாக நடத்தப்படுவதினின்று, அசட்டை செய்யப்படுவதினின்று, துஸ்பிரயோகம் செய்யப்படுவதினின்று அல்லது இழிவுபடுத்தப்படுவதினின்று பாதுகாக்கப்படுவதற்கும்,

அத்துடன் கணிசமான அநீதி வேறு வகையாக விளையுமாயின் சிறுவரைப் பாதிக்கும் குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் அரச செலவில் அரசினால் சட்ட உதவி வழங்கப்படுவதற்கும் உரிமையுண்டு.

**சிறுவர் இளம் பராயத்தவர் கட்டளைச் சட்டம்.**

1939ம் ஆண்டின் 48ம் இலக்க இச்சட்டம் பல முறை திருத்தங்களைக் கொண்டு வந்து சீர்திருத்தப்பட்டது. இது இலங்கைச் சிறுவர்கள், இள வயதினர் தொடர்பான மிக முக்கியமான சட்டமாகும். இளவயதினர் செய்யும் தவறுகள் சிறு வயதினருக்கு எதிராக செய்யப்படும் தவறுகள் பற்றி விரிவாக இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இளம் பராயத்தவர் எனப்பவது யார்?16 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் இளம்பராயத்தவர் ஆவார்.

**இளம்பராயத்தவர் நீதிமன்றம் என்றால் என்ன?**

16 வயதுக்குக் குறைந்த எந்தவொரு சிறுவர்களும் செய்கின்ற தவறுகளை குற்றவியல் சட்டத்தின்படி விசாரணை செய்ய முடியும். சிறுவர் மற்றும் இளம்பராயத்தவர்கள் கட்டளைச் சட்டதின்படி, குற்றச்சாட்டு ஒன்றை விசாரிப்பதற்காக அல்லது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழக்குத் தொடர்பான விசாரணையை நடாத்துவதற்காக எந்தவொரு நீதவான் நீதிமன்ற அமர்வும், இளம் பராயத்தவர் நீதிமன்றம் எனப்படும். ஏனெனில் சிறுவர்கள் குற்றம் சாட்டப்பட்டால் அவர்களை பொதுமக்கள் முன்னிலையில் விசாரிப்பதில்லை.

சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்ற போது, சிறுவர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது நீதிமன்றங்களின் பிரதான கடமையாகும். தேவையான இடங்களில் சிறுவரை குறிப்பிட்ட சுற்றுச் சூழலில் அப்புறப்படுத்தல், கல்வியும் பயிற்சியும் பெறுவதற்கு வழிவகுத்தல் போன்றவற்றின் மூலம் சிறுவர் நலனைப் பேணுவதற்கு சிறுவர் நீதிமன்றங்கள் வழிவகுக்கும்.

***சிறுவர் நீதிமன்றத்தில் என்ன முறையில் வழக்குத் தொடரப்படும்?***

* பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால்,
* நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தினால்,
* பொலிஸ் நிலையத்திற்கு வரும் பிள்ளைகளின் முறைப்பாடுகளின் அடிப்படையில்

*பொலிசார் இது பற்றி யாருக்கு அறிவித்தல் கொடுப்பர்?*

சிறுவர் இளவயதினரை பொலிசார் தடுத்து வைக்கின்ற வேளையில் அல்லது சிறுவர் நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கும் முன்னர் அது தொடர்பாக பொலிசார் குறிப்பிட்ட பிரதேச சிறுவர் பராமரிப்பு அதிகாரிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

*பொலிஸ் பிணை வழங்க முடியுமா?*

கைது செய்யப்பட்டவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரை அழைத்து அப்பிள்ளையை அல்லது இளம்பராயத்தவரை பிணையில் அனுப்ப பொலிசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. **அல்லது** பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் ஒப்படைக்கு முன்பதாக, தடுப்புக்காவல் இல்லமொன்றில் அல்லது தொண்டர் தடுப்புக் காவல் இல்லமொன்றில் தடுத்து வைக்க முடியும்.

*பிள்ளையை சிறையிலிட முடியுமா?*

குற்றமொன்றிற்காக அல்லது தண்டப்பணத்தை செலுத்தாததன் காரணமாக எந்தப் பிள்ளையையும் சிறையிலிட முடியாது.


*சிறுவர் அல்லது இளவயதினரை விசாரிக்கும் நீதிமன்றங்களுக்கு விசேட நடைமுறை எதுவும் உண்டா?*

- பொலிஸ், நீதிமன்றம் வேறு இடங்களில் சிறுவர் இளவயதினரை ஏனைய வயது வந்த குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைத்தல்
- பிணை வழங்கும் சந்தர்ப்பங்களில் சிறுவர், இளவயதினரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பிணையில் விடுதலை செய்தல்.
- பிணை வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களை சிறைச்சாலைகளுக்கு அனுப்பாமல் நன்னடத்தை இல்லங்களில் அல்லது பொறுப்பான ஒருவரின் பாதுகாப்பில் தடுத்து வைத்தல்.
- வழக்குத் தொடர்பான விடயங்கள் இடம்பெறுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் சிறுவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு வாய்ப்பளித்தல்.
- நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட சிறுவருக்கு பாதுகாப்பு தேவைப்படும்பட்சத்தில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அதிகாரிக்கு அறிவித்தல்.
- சிறுவர், இளவயதினர் தொடர்பான நீதிமன்ற அறிக்கைகளை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரிப்பதை தடை செய்தல்.

- குற்றவாளியாக கருதப்படும் சிறுவர்கள், இளம்பராயத்தினர்களுக்கு அவர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் தண்டனை வழங்கல்.
- அபராதம் விதிக்கப்படுமாயின் அதனை பெற்றோர் அல்லது பாதுகாவலர் அத்தொகையை செலுத்தல்

**சிறுவர் விடயங்களை கையாளுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களும் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல்கள**

- சிறுவர்களின் உச்ச நலனையும், நன்மையையும் கருத்திற்கொண்டே செயற்பட வேண்டும்.
- சிறுவரின் வாக்குமூலத்தை தாய்மொழியில் பெறவேண்டும். முடியாத சந்தர்ப்பத்தில் மொழியெர்ப்புச் செய்ய வேண்டும்.
- அபிவிருத்திக்கான உரிமை, பாதுகாப்பு மற்றும் பங்களிப்பு ஆகியன சிறுவர்களின் அடிப்படை உரிமையாக கருதப்பட வேண்டும்.
- விசேட தேவையுள்ள சிறுவர்களை அதற்குரிய தகுதிவாய்ந்த நடைமுறையினை பின்பற்றுதல் வேண்டும்.
- சிறுவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவர்கள் தொடர்பான புனர்வாழ்வளிக்கும் செயன்முறைகளுடன் தொடர்புபடுவதற்கு உரிமையுண்டு.
- எந்தச் சிறுவர்களையும் பாகுபாட்டிற்கு உட்படுத்துவதோ, அவமானத்தை ஏற்படுத்துவதோ கூடாது.
- சிறுவர் பற்றிய அறிக்கைகளையும், ஆவணங்களையும் மிகவும் இரகசியமாக வைக்க வேண்டும்.
- கல்வியின் மூலம் இந்தச் சிறுவர்களின் கலாசாரம், பழக்க வழக்கங்களையும் மற்றும் தனிநபர் திறமைகளையும் வளர்க்க ஊக்கமளிக்க வேண்டும்.
- இங்கு வெற்றிபெற்றவர் தோல்வி கண்டவர் என்ற நிலை இல்லாதிருக்க வேண்டும்.
- சிறுவர்களை நிறுவனப்படுத்தும் போதும். சமூகமயப்படுத்தும் போதும் முன் அல்லது பின் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.



"பாதுகாப்பு எளிதாக நடந்தேறக்கூடிய விடயமல்ல. அது சமூக கருத்தொப்பினதும் மூலதனத்தினதும் பிரதி விளைவாகும். எம்சமூகத்தின் வலுவற்ற பிரஜைகளான சிறுவர்களுக்கு பயமற்றதும் வன்முறையற்றதுமான வாழ்வினை வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம்."

தெரேசா அம்மையார்

# விடியலைத் தேடும் வாண்டுகள்....



சிறுவர் எங்களைக் குறைத்து மதிப்பதும்
தருணம் பார்த்து தகாது செய்வதும்
வறுமை கோட்டில் வாழ விடுவதும்
வருத்தி வருத்தி துன்பம் தருவதும்
வெறுத்து ஒதுக்கி வீதியில் விடுவதும்
பெரிய மனிதரின் பண்புகள் தானே?

அடித்து உதைத்து ஆவேசப் படுவதும்
படிப்பை பாதியில் நிறுத்தி விடுவதும்
வடித்த கஞ்சியை வருத்திக் கொடுப்பதும்
இடித்த புளி போல இருத்தி வைப்பதும்
விடிந்ததும் விடியாது நித்திரைக் களைப்பதும்
கொடிய மனிதரின் கொள்கையும் தானே?

இதயத்துள் அன்பை கொடுக்க மறுப்பதும்
சுதந்திரக் காற்றினை சுகிக்கத் தடுப்பதும்
வதைக்கும் எண்ணத்தை வாணாள் முழுவதும்
விதைத்து விதைத்து வேதனை தருவதும்
சிதைக்குள் சிறைக்குள் தள்ளி வைப்பதும்
இதய முள்ளோரே இது முறை தானே?

கண்டதும் கருமையாய் கருவிச் சபிப்பதும்
உண்டதை தொண்டையில் சிக்கிடும் போதிலும்
விண்டு விழுங்க நீர் கொள்ள மறுப்பதும்
கண்டவர் வீட்டிலே வேலைலக்கமர்த்தலும்
கண்ட துண்டமாய் காட்டில் கிடத்தலும்
சண்டாள மனிதரே சரியிது தானே?



மனசாட்சி என்பதோ நீதியின் இருப்பிடம்
உணர்ச்சிகளதிலே மனிதத்தின் தரிப்பிடம்
பணத்துக்காய் சிறுவரை பலிக்கடா ஆக்குதல்
குணமுள்ள மானுடன் செயலன்று உண்மை
அறுசுவை உண்டி உண்ணத் துடிக்கிறாய்
சிறுவர்களில்லத்தே சேர்த்திடல் நன்றோ?

**செல்வராசா சதுஜன்**
மட்/கல்/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலம்

# சிறுவர்களும் வன்முறைசாரா தொடர்பாடலும்




**- A.Alaguraj** (B.A) -

**CRPA and NVC Trainer**

Valaichenai




வன்முறைசாரா தொடர்பாடல் என்பது மனிதனின் இயல்பான கருணையை வெளிக் கொண்டு வருவதற்கான ஒரு கருவியாக "மார்ஷல் ரொசன் பேக்" அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தொடர்பாடல் முறைமையாகும். மனிதர்கள் இயல்பாகவே கருணைமிக்கவர்கள். ஆனால் வீட்டிலும் சமூகத்திலும் பெற்றுக் கொண்ட விடயங்கள் காரணமாக அவர்கள் கருணையிலிருந்து விலகி காணப்படுகின்றார்கள்.

"வன்முறைசாரா தொடர்பாடல் என்பது எமது உணர்வுகளையும் தேவைகளையும் நேர்மையாக வெளிப்படுத்துவதுடன், மற்றவர்களது உனர்வுகள் தேவைகளை இதயபூர்வமாக புரிந்து கொள்வதை வலியுறுத்துகிறது.

**உணர்வுகள் என்பது :-**

- எமக்குள் உள்ளார்ந்தமாக எம்மனதினுள் நாம் அனுபவிக்கும் விடயமாகும்.
- எண்ணங்களோ அபிப்பிராயங்களோ அல்ல.
- பூர்த்தி செய்யப்பட்ட அல்லது பூர்த்தி செய்யப்படாத தேவைகளின் வெளிப்பாடாகும்.
- எமது உணர்வுகளுக்கு காரணம் பிறரின் செயற்பாடுகள் அல்ல எமது உணர்வுகளுக்கு நாமே பொறுப்பேற்க வேண்டும்.

(உதாரணம் - பயம் ,கோபம் , வெறுப்புணர்ச்சி , வேதனை, கவலை .......)

**தேவைகள் என்பது**

- தேவைகள் உலகளாவிய ரீதியானது எம் எல்லோருக்கும் உள்ள தேவைகள் ஒரே விதமானவை
- தனிப்பட்ட நபரையோ தனிப்பட்ட செயற்பாடொன்றையோ குறித்து நிற்காது.
- மனிதர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் தேவைகளின் வெளிப்பாடுகளாகும்.

(உதாரணம் - உடல்நலம் , நேர்மை, மகிழ்ச்சி , சமாதானம், பாசம் .......)

சிறுவர்கள் இயற்கையாகவே தமது உணர்வுகளையும் தேவைகளையும் வெளிப்படுத்தி அன்பாக நடந்து கொள்வார்கள். ஆனால் காலம் செல்லச் செல்ல அவர்கள் வீட்டிலும் சமூகத்திலும் பெற்றுக் கொள்ளும் விடயங்கள் அவர்கள் தமது உணர்வுகளையும் தேவைகளையும் கட்டுப்படுத்துபவர்களாகவோ தமது தேவைக்காக பிறரின் தேவைகளை புறக்கணிப்பவர்களாகவோ மாறுகின்றார்கள்.

வன்முறைசாரா தொடர்பாடலானது சிறுவர்களையும் தேவைக் கொண்ட மனிதர்களாகவே கருதுகின்றது. ஆகவே மற்றவர்கள் அவர்களது ஆரோக்கியம், பங்குபற்றல் பாதுகாப்பு மேம்பாடு ஒழுங்கு போன்ற தேவைகளை அவர்களுக்கு திணிப்பதற்குப் பதிலாக அவர்களே அத்தேவைகளை புரிந்த கொண்டு செயற்பட வழிவகுக்க வேண்டும் மேற்குறிப்பிட்ட தேவைகளை அவர்கள் மீது திணிப்பதன் மூலமாக அவர்கள் அவற்றை புறக்கணிக்கக்கூடிய எதிர்க்கக்கூடிய வாய்ப்புக்களுமே காணப்படுகின்றது. எனவே பிள்ளைகளின் தேவைகளை சமநிலை அளவில் அடையக்கூடிய வழிமுறைகள் ஏற்படுத்தக்கூடிய சூழலை வீட்டிலும் பாடசாலையிலும் ஏற்படுத்த வேண்டும் என்று வன்முறை சாரா தொடர்பாடல் பரிந்துரைக்கின்றது.

தற்போதைய பிரதேச சூழ்நிலையில் குடும்பங்களில் பெற்றோர்கள் சகோதரர்களுக்கு இடையில் இடம்பெறும் வன்முறை தொடர்பாடல்களும் முரண்பாடுகளும் சிறுவர்களின் மனங்களை மிகவும் பாதிக்கின்றது. ஆகவே அவர்களது தேவைகளை அன்பு ஆதரவு அமைதியான சூழல் போன்ற தேவைகளையும் பூர்த்தி செய்ய உதவி செய்வதற்காக இத்தகைய வீட்டு வன்முறைகளை தவிர்க்க வேண்டும்.

அதே நேரத்தில் சிறுவர்கள் முரண்படும் நேரத்தில் அவர்களை வற்புறுத்தலோ தண்டனைகளோ இல்லாமல் அவர்களுக்கு உங்களது தேவைகளையும் உணர்வுகளையும் குற்றம் சுமத்தாமல் வெளிப்படுத்துவோமானால், அவர்கள் அதனை புரிந்து கொண்டு செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது.

பாடசாலை சூழ்நிலைகளில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கிடையிலான தொர்பாடலும் மிக முக்கியமானது. ஆசிரியர்கள் தமது உணர்வுகள், தேவைகளை புரிந்து கொண்டு மாணவர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்காது மாணவர்களின் நிலையிலிருந்து அவர்களின் தேவைகளை உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

குறிப்பாக கடந்த அண்மைக்காலங்களில் பாடசாலை மட்டங்களில் பதினெட்டு தற்கொலை சம்பவங்கள் வாழைச்சேனை GBV-Desk Base Hospital இல் பதிவாகியுள்ளது. அதே நேரம் சிறுவர்கள் வாழ்கின்ற சூழல்களில் சிறுபராயத்திலே பெண்பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் கணிசமான அளவு காணப்படுகின்றது. இவ்வாறான நிலைகள் சார்ந்து ஏன். பெரியவர்களான நாங்கள் சிறுவர்களின் உணர்வுகளை புரிந்து அவர்களின் தேவைகளுக்கு மதிப்பளிக்கவில்லை?

ஆகவே சிறுவர்களின் நலன்பற்றி சமூகம் சிந்திக்க வேண்டும். அவர்களது தேவைகளை அவர்களே புரிந்து கொண்டு செயற்படக்கூடிய சூழலை உருவாக்குவதன் மூலம் சிறுவர்கள் தன்னிச்சையாக இயங்கக்கூடிய தன்னம்பிக்கையும் ஆளுமையும் கொண்ட மனிதர்களாக எதிர்காலத்தில் உருவாகுவதற்கு வழிவகுக்கின்றது.

# பிரதேச செயலகமும் சிறுவர் பாதுகாப்பு முறைகள், ஏற்பாடுகள், செயற்பாடுகள்

ச.ஷகீர்னிர்

இளமதிர் சிறுவர் கழகம்

வாழைச்சேனை

அரசாங்கத்தில் சிறுவர்களுக்கான பாதுகாப்பு கொள்கைகள், தீர்மானங்கள் சட்ட திட்டங்கள் மற்றும் சிறுவர்களுக்குரிய உரிமைகளும், வேலைத்திட்டங்களும் சிறப்பாக அமைவதற்கு எமது பிரதேசத்தோடு மிக நெருங்கிய சொத்தாக பிரதேச செயலகங்கள் காணப்படுகின்றன.

இப்பிரதேச செயலகங்கள் தோறும் பிரதேச செயலாளரின் தலைமையிலும் கண்காணிப்பிலும் மற்றும் வழிகாட்டலிலும் சிறுவர் பற்றிய பாதுகாப்பு உரிமை வேலைத்திட்டத்திட்டங்களை மேற்கொள்ள சிறுவர் நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகாத்தர் போன்ற சேவை ஆற்றுகின்றனர். இவர்கள் இருந்த போதிலும் சமூக சேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்றோரும் காணப்படுகின்றனர்.

☆ சிறுவர் சமூக வட்ட பிரதிநிதிகளை ஒன்றிணைந்து பிரதேச சிறுவர் சபையினை உருவாக்கி சிறுவர் நல நோம்பு வேலைத்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன.

☆ பிரதேச சிறுவர் கண்காணிப்பு குழுவை (DCMC ) அமைத்து சிறுவர் மேம்பாடு பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

☆ கிராம சேவகர் பிரிவுகள் தோறும் கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழுக்கள்,சிறுவர் சமூக மட்டங்கள் அமைத்து கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

☆ சிறுவர் பரபாமரிப்பு,பாதுகாப்பு,தொடர்பாக சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் சமூதாயத்தில் பல்வேறு மட்டங்களிலும், பாடசாலைகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

☆ சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பாக குடும்ப குழு ஒன்று கூடல் மற்றும் விடய மாநாடுகள் தேவையான சந்தர்ப்பங்களில் நடைபெற்று வருகின்றன.

☆ பாடசாலை விட்டு இடைவிலகிய பிள்ளைகள்,இடைவிலகும் தறுவாயில் உள்ளபிள்ளைகளை இனங்கண்டு பாடசாலைக்கு அனுமதிப்பதிற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

☆ பிறப்புச்சான்றிதழ் அற்ற பிள்ளைகளுக்கு அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

☆ வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிறுவர்களை மீட்டு அவர்கள் குடும்பங்களை புனருத்தாபனம் செய்யும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

☆ துஸ்பிரயோகங்களுக்குள்ளான பிள்ளைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு அவர்களுக்கு புனர்நிர்மாணச்செயற்பாடுகளை முன்னெடுக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

☆ மிகவும் வறிய நிலையிலான குடும்பங்களில் ஒரே கருவில் பிறக்கும் இரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான போசாக்கினை மேம்படுத்துவதற்கான நிதி உதவி வழங்கப்படுகின்றது.

☆ 5வயதிற்குட்பட்ட போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு ஒரு கிளாஸ் பால்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

☆ அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளிற்கான விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

☆ விசேட தேவைக்குற்பட்ட சிறுவர்களை பலப்படுத்தும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

☆ சிறுவர்களைள கௌரவிப்பதற்காகவும் மக்கள் மத்தியில் சிறுவர் பாதுககாப்பு தொடர்பான விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், சர்வதேச சிறுவர் தினம் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

☆ பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் விருத்திக்கான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

☆ பிரச்சினைகளுக்கு ஆளாகியிருக்கும் ஆபத்தை எதிர் நோக்கியிருக்கும் உரிமை மறுக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

☆ சிறுவர்களுக்கு ஆக்கத்திறனையும்,சிந்தனைத்திறனையும் வளர்க்கும் நோக்குடன் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடாத்தப்படுகின்றது. அத்தோடு இளைய படைப்பாளிகளை உருவாக்கும் பொருட்டு வருடா வருடம் வண்ணத்துப்பூச்சி மலர் வெளியிடப்பட்டு வருகின்றது.

☆ சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விசேட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது.

☆ சிறுவர்களுக்கு நட்புறவாடுவதற்காக ஒன்றுகூடல் வேலைத்திட்டங்கள் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

☆ அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி பெற்று பொருளாதார பிரச்சினையை எதிர் நோக்கும் சிறுவர் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான பலப்படுத்துவதற்காக

அரச உதவியுடன் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

☆ வறுமையான மாணவர்களுக்கு புலமை பரிசில் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

☆ உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உளவளத்துணை சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

☆ சிறுவர் இல்லங்களை கண்கானிப்பதற்கு பிரஜைகள் குழு ஒவ்வொரு இல்லத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளன.

சிறுவர் அவர்களுக்குரிய உரிமையை பேணி அவர்கள் சமூகத்தில் நற்பிரஜையாக வருவதற்கு தேவையான சகல வேலைத்திட்டங்கள் பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்றன. மற்றும் சிறுவர் சட்டதிட்டங்கள், பாதுகாப்பு சிறுவர் பராமரிப்பு வழங்கப்படுவதற்கு பிரதேச செயலகம் சமூகங்களோடு விழிப்புணர்வு செய்வதற்கு சிறுவர் கழகங்களும் VCRMC யும் உறுதி மொழி செய்ய வேண்டும்



"சிறுவர்களில் உலகம் கொண்டுள்ள நம்பிக்கையினை விட சிறந்த இன்னும் ஒன்றில்லை. அவர்களின் உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்களது நலன்கள் பாதுகாக்கப்பட்டு அவர்களது வாழ்வு பீதியற்ற வாழ்வாக சமாதான சூழலில் மலர உறுதி செய்யும் பணியினை விட வேறு முக்கிய பணி இல்லை"

**கோபி அண்ணாண்**

# பெற்றோரைப் பேணுவோம்

ப.தனுஜினி இளமதி சிறுவர் கழகம், வாழைச்சேனை

நமக்கு என்றும் இனியவர்கள் தாய் தந்தையரே இவர்களை விட சிறந்தவர்கள் எவரும் இவ்வுலகில் எமக்கு இல்லை. ஆசிரியரும் தெய்வமும் அவர்களுக்கும் பின்னரானவர்கள். இதன் மூலம் பெற்றோரின் பெருமை புலப்படுத்தப்படுகின்றது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை "தந்தை சொல் மிக்க மந்திரமும் இல்லை" என்னும் முதுமொழிகளை பெற்றோர் தம் சிறப்பினை பேசுகின்றன. நம் பெற்றோர் நமக்குச் செய்த உதவியும் அவர்கள் காட்டும் அன்பும் அளவிடற்கரியன. அவற்றை சொல்லில் வடித்தலும் அரிது.

நம்மை பெற்று வளர்த்திட நம் பெற்றோர் பட்ட துன்பங்கள் பற்பல. இறைவனை வேண்டி விரதமிருந்தனர். ஈ ,எரும்பு தீண்டாமல் பேணி வளர்த்தனர். நமக்கு நோய் ஏற்பட்டால் அவர்கள் அடைந்த துன்பமும் அளவிட தக்கனவல்ல. நமது தாய் பத்தியம் காத்து, நமது நோயை போக்கிவிட பட்ட கஷ்டங்கள் பல. பருவ மானாதும், நம்மை பாடசாலைக்கு அனுப்பி னர். நமக்கு வேண்டிய சகல உபகரண ங்களையும், உடைகளையும் வாங்கித் தந்தனர். நாம் நல்ல கல்வி கற்று நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ விருப்புக் கொண்டுசெயற்பட்டனர்.




தங்கள் பசி பிணி துன்பம் அனைத்தையும் மறந்த நம்மை கண்ணை இமை காப்பது போல காத்து வளர்த்து வந்தனர். அவர்களது அன்பும் தியாக சிந்தனையும் என்றும் நம்மால் மறக்க முடியாதவையாகும்.

வாழ்நாள் முழுவதும் நமது நலனுக்காகப் பாடுபட்ட பெற்றோர்களை நாம் நன்றியுடன் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். நமது பெற்றோர்களே நமது கண்கண்ட கடவுளாவர். அவர்கள் சொல்பனவற்றை நாம் கேட்டு நடத்தல் வேண்டும். "ஏவா மக்கள் மூவா மருந்து" என்ற பொன் மொழிப்படி பெற்றோரின் குறிப்பறிந்து நாம் செயற்பட வேண்டும். நமது பணிவையும் அன்பையும் கண்டு அவர்கள் மனம் மகிழும் படி நாம் நடக்க வேண்டும். பிள்ளைகள் பெரும் செல்வமெனக்கருதி எம்மை வளர்த்த பெற்றோரை எந்நாளும் நாம் பேணிக்காத்தல் வேண்டும். குறிப்பாக முதுமையடைந்த வேளையில் பெற்றோரின் தேவையறிந்து அவர்களுக்கு வேண்டியவற்றை செய்திட வேண்டும். பெற்றோர் உடலும் உள்ளமும் நோகாமல் காத்திட வேண்டும்.

இன்று நம் மத்தியில் பெற்றோரைப் பேணிப்பாதுகாப்பதில் பிள்ளைகள் அதிக நாட்டம் கொள்வதாயில்லை எனக் கூறப்படுகிறது. சிலர் முதிய பெற்றோரைத் தனியாக வாழ வைத்து விட்டு, தன் மனைவி மக்களோடு தனித்து வாழ்கின்றனர். பிள்ளைகளை அருகில் வைத்திருக்கப் பெறாத பெற்றோர் பிறர் கையை எதிர்பார்த்து வாழ நேரிடுகிறது. இதனால் மனவாட்டம் அடைகின்றனர். சில இளைஞர்கள் பெற்றோரின் அறிவுரைகளை கருத்திற் கொள்ளாது அவர்கள் மனம் நோகும் வகையில் கண்டிக்கவும் முற்படுகின்றனர் . பாடுபட்டு வளர்த்த பெற்றோர்களது அன்பையும் அருமையையும், நன்றியையும் மறந்து இவ்விதம் நடந்து கொள்வது தவிர்க்கப்படல் வேண்டும். பிள்ளைகள் தமது கடமைகள் எவை என்பதையும் இவர்கள் உணர வேண்டும். "தாய் தெருவில் பிச்சைக்கு அலைய மகன் கும்ப கோணத்தில் கோதானம் செய்தானாம்" என நமத நாட்டு புறங்களில் கூறுவது போன்ற செயல்கள் இடம் பெறக் கூடாது. பெற்றோரை தெய்வமாகக் கருதி செயற்படுவதே பிள்ளைகளின் கடமையாகும். தாய்,தந்தையரைப் போற்றி நடந்த பெரியோர்கள் பலருடைய வாழ்க்கை வரலாறுகளை படித்திருக்கிறோம். தந்தை சொற்படி காடேரிய இராமனும் தன் தந்தையின் கருத்திற்கு இணையத்தான் இன்ப வாழ்வையே துறந்த பீஷ்மனும் இதற்கு சிறந்த சான்றுகளாவர். உலகம் போற்றும் மகாத்மா காந்தியடிகள் கூட த்தன் வாழ்வின் இறுதிவரை தாயின் சொல்லை மறவாது வாழ்ந்து அழியாப்புகழ் பெற்றமையை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது அற நூல்கள் எல்லாம் தாய்,தந்தையரை மதித்துப் பேணிப் பாதுகாத்திட வேண்டும் என்றே வலியுறுத்துகின்றது.

"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்த நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவரின் வாங்கு இதனையே தெளிவு படுத்துகின்றது. சுருங்கக்கூறின் பெற்றோரைப் பேணிப்பாதுகாக்கும் கடமை பிள்ளைகளுக்கு உண்டு தாய்,தந்தையர் செய்த தியாகங்களை நன்றிகளை மறப்போர் ஒரு போதும் உய்வு பெறமுடியாது. பேற்றோரைப் பேணி அவர்கள் மனம் நோகாது மகிழ்வுடன் வாழ்வதற்கு உதவுதலே பிள்ளைகளின் பெருங்கடனாகும்.



"நம் அனைவருக்கும் சமமான திறமைகள் இல்லை. ஆனால் எம் திறமைகளை வளப்படுத்த அனைனவருக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்"

பில் கொஸ்பி

# முதுமையின் அருமை

மொட்டு முதிர்ந்து பூவாகும்
பூ முதிர்ந்து காயாகும்
காய் முதிர்ந்து விதையாகும்
விதை முதிர்ந்து மரமாகும்
அதுவே மனிதன் விரும்பும் வரமாகும்

ஆனால் ஆறறிவு கொண்ட மனிதா நீ
குழந்தயாய் பிறந்தாய் மொட்டு போல
பின் சிறுவனாய் பூ போல
மீண்டும் வாலிபனாய் காய் போல
கனி போல முதிர்ந்து விட்டாய்
ஆனால் மொட்டின் முதிர்வு தனை
விரும்பும் சமூகம் உன் முதிர்வை
ஏற்காது விடுகிறது ஏனோ?

காலம் கடந்து உறங்கிக்கிடக்கும் முதுமையே
எழுந்து நின்றால் எரிமலையும் வழி
கொடுக்கும் உறங்கிக் கிடந்தால் சிலந்தி
வலையும்
சிறை பிடிக்கும் என்ற உண்மை
தெரியாதோ உனக்கு?


**நா.சகானா**
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

# கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகப்பிரிவில் அங்கவீனம் – ஒரு நோக்கு

**சிவகுரு ஜெயசேகர்**

சமூகசேவை உத்தியோகத்தர்

பிரதேச செயலகம், வாழைச்சேனை.



அங்கவீனம் என்பது ஒரு மனிதன் தனது வழமையான செயற்பாட்டினை மேற்கொள்ளு வதற்கு தடையாக இருப்பது அல்லது ஒரு தொழிற்பாட்டை பூரணமாக முடிக்க முடியாமல் செய்வது அங்கவீனம் என குறிப்பிட முடியும். இவ்வாறு மனிதனில் காணப்படும் குறைபாட்டினைக் கொண்டு அங்கவீனத்தினை விஷேட தேவை உடையோர், மாற்று வலுவுடையோர் என பலவாறு அழைக்கின்றார்கள்.

இவ்வாறு அங்கவீனம் ஏற்படுவதற்கான காரணிகளை நோக்கும் போது ஒன்று பிறப்பிலும் மற்றையது பிறப்பின் பின் ஏற்படுவதனையும் காணலாம். பிறப்பில் ஏற்படும் அங்கவீனத்திற்கு போசாக்கு மற்றும் கருவில் ஏற்படும் பாதிப்பு அதாவது வெளிச்சூழலின் தாக்கத்திற்கு உட்படல் என்பன காரணியாக அமைய பிறப்பின் பின் ஏற்படும் அங்கவீனத்திற்கு வன்செயல் , யுத்தம் அனர்த்தம் , விபத்து என்பன காரணியாக அமை கின்றது

ஒரு கருவானது உருவாகி வெளி உலகிற்கு பூரணமான ஒரு குழந்தையாகப்பிறப்பதற்கு குறைபாடு இல்லாத போசாக்கு சூழலிலும் தாயிலும் காணப்படும். அமைதி என்பன முக்கிய காரணியாக அமைகின்றது. இதில் ஏதாவது குறைபாடு ஏற்படும் போது அங்கவீனம் தோன்றுவதற்கு கூடியளவு சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இதற்கு உதாரணங்களாக நாம் பார்க்கும் போது 2ம் உலக மகா யுத்தத்தின் போது யப்பானில் வீசப்பட்ட அணுகுண்டொன்றின் தாக்கத்தினால் இன்னும் யப்பானில் அங்கவீனமாக குழந்தைகள் பிறப்பதையும் வறுமை காரணமாக சோமாலியா போன்ற நாடுகளில் போதிய போசாக்கின்மையால் அங்கு பிறப்பின் போது அதிக அளவான அங்கவீனமான குழந்தைகள் பிறப்கின்ற கூறுகின்ற போதிலும் எமது நாட்டிலும் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அதிகளவான அங்கவீனமான 06 குழந்தைகள் பிறந்துள்ளன. இதற்கு உதாரணமாக பாசிக்குடா கல்குடா பிரிவில் குழந்தைகள் அங்கவீனமாக பிறந்தள்ளது இதற்கு நல்லதொரு உதாரணமாகும்.


இவ்வாறு பிறப்பின் போதும் அதன் பின்னரான நிகழ்வுகளின் போதும் அங்கவீனமானோர் தொகை இலங்கையை பொறுத்தவரை ஒரு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு உள்ளதால் அரசானது இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அல்லது

பராமரிப்பதற்கென பல திட்டங்களை அமுல்படுத்தி அதனை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவ்வாறு அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை நோக்குகின்ற போது

முதலில் அங்கவீனர்களுக்கென சமூக சேவை அமைச்சின் கீழ் தனியான தொரு செயலகம் அத்துடன் மாகாண மட்டத்தில் மாகாண சமூக சேவை திணைக்களம் என்பவற்றை அமைத்து இவ்வாறு பிறப்பின் போதும் அதன் பின்னரும் அங்கவீனமாக மாற்றப்படுவோருக்கான தேவைகளை நிறை வேற்றி வருவதனை நாம் காணலாம்.

இவ்வாறு அரசானது அங்கவீனர்கள் மேல் கொண்ட கருனை காரணமாக மத்திய அரசினூடாகவும் மாகாண அரசினூடாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களில் அங்கவீனர்களுக்கென ரூபா:100000.00 பெறுமதியான வீட்டுதிட்டம் மகிந்த சிந்தனைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு செயலகப்பிரிவில் உள்ள ஒவ்வொரு அங்கவீனருக்கும் ரூபா 3000 வீதம் மாதாந்த உதவித்தொகை, ரூபா 10000.00 சுய தொழில் கொடுப்பனவு, இலவச கண்வில்லை, மற்றும் உபகரணம் என்பனவற்றை குறிப்பிடலாம். இதே போன்று மாகாண சபைமூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் சுய தொழில் கொடுப்பனவு ரூபா 20000.00 உபகரணங்கள் மாதாந்த உதவி கொடுப்பனவு, வைத்திய உதவிக் கொடுப்பனவு, போக்குவரத்து உதவிக் கொடுப்பனவு, என பல்வேறுபட்ட உதவிகளை செய்வதுடன் முக்கியமாக அங்கவீனர்களுக்காக சேவையாற்றும் பல சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான அனுமதி என்பனவற்றை குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்ட பலவகையான திட்டங்களை அரசானது நடைமுறைப்படுத்தியுள்ளதுடன் அங்கவீனர்களுக்கான தனியான பாடசாலை, தொழில் பயிற்ச்சி நிலையங்கள் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அரசினால் அமைக்கப்படும் மற்றும் அமைக்கப்பட்ட பொதுக்கட்டிடங்களில் அணுகும் வசதிகளுடான கட்டிடங்கள் அமைக்கவேண்டுமென்ற 2006.10.17ம் திகதி 1467/15ம் இலக்க வர்த்தமானிப்பத்திரிகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 1966ம் ஆண்டின் 28ம் இலக்க அங்கவீனமுள்ளள ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச்சட்டமும், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பல திட்டங்களை அரசானது அறிமுகப்படுத்தி அங்கவீனர்களின் வாழ்க்கைத் தரத்தின் பால் அக்கறை கொண்டுள்ள போதிலும் சில பெற்றோர்களும் சமூகமும் இன்னும் இவர்கள் பால் எந்த வித அக்கறையும் கொண்டவர்களாக காணப்படாமை என்பன இத்திட்டங்கள் முழுமை பெறாமைக்கு காரணமாக அமைகின்றது.



கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் உள்ள அங்கவீனர்கள் பற்றிய தரவினை நோக்கும் போது (2011ம் ஆண்டு)

பிரதேச செயலாளர் பிரிவு - கோறளைப்பற்று வாழைச் சேனை

கி.பிரிவு - 12. மொத்த குடும்பத்தொகை - 7204. மொத்த ஆட்களின் தொகை -23986

**அங்கவீனர்களின் தொகை - 372**

| கி.பிரிவு | வன் செயல் | | இயற்கை | | வித்து | |
|---|---|---|---|---|---|---|
| | சிறுவர் | பெரியோர் | சிறுவர் | பெரியோர் | சிறுவர் | பெரியோர் |
| 1.மிறாவோடை | - | 07 | 03 | 05 | 01 | - |
| 2.கறுவாக்கேனி | - | 08 | 03 | 24 | - | 02 |
| 3.கிண்ணையடி | | 11 | 08 | 15 | 01 | 02 |
| 4.சுங்கான்கேனி | - | 05 | 07 | 16 | - | 02 |
| 5.கும்புறுமூலை | - | 02 | 03 | 12 | - | - |
| 6.கல்குடா | - | 02 | 07 | 18 | - | 02 |
| 7.கல்மடு | - | 04 | 01 | 41 | - | 01 |
| 8.வாழைச்சேனை | - | 04 | - | 24 | - | 03 |
| 9.புதுக்குடி | - | 03 | 02 | 28 | - | - |
| 10.பேத்தாளை | - | 20 | 01 | 27 | - | 01 |
| 11.நாசன்தீவு | - | 02 | 02 | 11 | - | 03 |
| 12.கண்ணகிபுரம் | - | 02 | 03 | 19 | - | 04 |
| மொத்தம் | - | 70 | 40 | 240 | 02 | 20 |



"பிள்ளைகளே உலகின் அதி உயர் வளங்களும் எதிர் காலத்தின் நம்பிக்கையுமாகும்"

ஜோன் கென்னடி

# பரிதவிப்பு



திரு.க. விக்ரம்சிங்கன்
(PPC- உளநல ஆற்றுப்படுத்துனர்)
வாழைச்சேனை.

குமார் தனது வீட்டில் விம்மி என்னும் பெயருடைய பெண் நாய் ஒன்று வளர்த்து வந்தான் அதனை அன்புடன் பராமரித்து வந்தான். அந்த நாயோ மிக அன்பாகவும் நன்றியுள்ளதாகவும் எஜமானுக்கு பாதுகாப்பானதாகவும் இருந்தது.

அந்த நாய் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்தது. அது வளர வளர அதன் எண்ணங்களும் கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பித்தன.

இவ்வாறு சில வருடம் உருண்டோடிய பின் அது இரண்டு ஆண் குட்டிகளை ஈண்டது அக்குட்டிகளோ ஈட்டிக்குப் போட்டியாக இரண்டும் படுக்கையிலும் பால்குடிப்பதிலும் சண்டையிட்டுக் கொள்வதுடன் இத்தாய் கொடுக்கும் சாப்பாட்டிலும் சண்டையிட்டு சாப்பிடும். தாய் எதை சொன்னாலும் கேட்காத இரண்டு குட்டிகளும் எதற்கு எடுத்தாலும் எதிர்த்து கதைப்பதுமாக இருந்து வந்தன.

இதனைப்பர்த்து வேதனையும் துயரமும் கொண்டு அந்த விம்மி நாய் தனக்குள்ளே கண்ணீர் வடிக்கும்.இதனை மற்ற நாயிடம் சொன்னால் தன் பிள்ளை வளர்ப்பை பழித்து விடுமே என்ற வேதனையுடனும் வாழ்ந்து வந்தன.

இந்த இரண்டு குட்டிகளின் செய்கையை அவதானித்து வந்த தாய் எதிர்காலத்தில் என்ன விபரீதம் நடக்குமோ என்று கலங்கியது.

ஒரு நாள் தாய் தனது இரண்டு குட்டிகளையும் அரவனைத்து பாலூட்டிய படி சில புத்திமதிகளை கூறியது.பிள்ளைகளே நீங்கள் இருவரும் ஒற்றுமையாக ஒருவருக்கு ஒருவர் அன்பாக வாழ வேண்டும் ஒருவருடன் ஒருவர் சண்டை பிடிக்கக்கூடாது. நீங்கள் சண்டை பிடித்தால் அது தன் வாழ்க்கைக்கு கூடாது வேதனைப்படுவது நீங்கள்தான் .

உங்களுக்கு கிடைக்கும் உணவினையும் படுக்கைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒரு தாய் புத்தி சொன்னால் அது எப்போதும் உங்கள் நன்மைக்காகவே இருக்கும் இதனால் தாயின் புத்தியை கேட்டு நடக்க வேண்டும் என்றது.


தொடர்ந்தும் அந்த இரு குட்டிகளும் சொல் கேளாதவையாகவே நடந்தன.எஜமான் போட்ட இறைச்சித்துண்டையும் தாய் சாப்பிடாமல் தனது குட்டிகளுக்கு கொடுத்தது.அதனையும் எனக்குப்பசி நான் முழுதையும் சாப்பிடப்போறேன் என ஒரு குட்டிகூற அதன் எதிர்வார்த்தையாக மற்றைய குட்டியும் ஈட்டிக்குப்போட்டியாக கூறிக்கொண்டு வாக்கு வாதம் மூண்டது.

தாய்க்கு இதனை சகிக்க முடியாமல் சொல்லுக்கேட்காத பிள்ளைகளுடன் கதைத்துப்பிரயோசனமில்லை என்ற எண்ணத்தில் வேதனையுடனும் குட்டிகளின் எதிர்கால செயற்பாட்டினை நினைத்து நோயுடனும் வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் தாய்நாய் பிள்ளைகளின் பசியைப்போக்கவும் சண்டையை சகிக்க முடியாமலும் வேதனையுடன் பிரதான வீதியை கடக்கும் போது நெடுந்தூரம் செல்லும் பஸ் தாய் நாயை அடித்து விட்டு சென்றது.

நீண்ட நேரமாக தாய் வராமல் இருந்ததால், தாயைத் தேடி இரு குட்டிகளும் பசியுடன் பார்க்கச் சென்றது. அவ்வேளை தனது தாய் வீதியில் பஸ்ஸினால் அடிபட்டு இறந்து கிடப்பதினை கண்டு, அதிர்ச்சியுடன் இரண்டு ஆண் குட்டிகளும் ஒன்றையொன்று கட்டிப்பிடித்து கதறி அழுதன. அனாதைகளான இரு குட்டிகளும் இனிமேல் இருவரும் தாய் சொன்ன புத்திமதிகளை கவனத்தில்கொண்டு கருத்தாக வாழ்வோம் என ஒன்றுக்கு ஒன்று ஒற்றுமையாக தாயின் தவிப்புடன் வாழ்ந்து வந்தன.

"தாய் சொல் தட்டாதே"



# பொழுது சாயும் நேரம் ......



பொழுது சாய்ந்து காரிருள் சூழ்கையில்
பறவைகள் போகையிலே
தனிமையின் முதுமையிலே வாடுகிறான்
முத்தையா என்ற கிழவன்.

அன்றொருநாள் அவன் செல்கையில்
அவனது பாட்டியை எதிர்த்து
அவளது பாசத்தை வெறுத்து
பணிவே இல்லாமல் சென்றான்
இன்றோ பாட்டியின் துன்பத்தை
பலவித வழிகளிலும் அனுபவித்து
அவன் அழுவதை யார் காண்பார்?
பதில் யார் சொல்வார்?

பல்வேறு இன்பங்களை அனுபவித்து
இளமையிலே அவன் முதுமையை
வெறுத்தான். இன்று அவன் வெறுத்த
முதுமை அவனை சூழ்ந்த விட்டது

வயிறெல்லாம் ஒட்டி வாயெல்லாம்
தடுமாற வறுமையிலே வாடுகிறான்.
குழிவிழுந்த கண்கள் குடும்பத்தை தேட
குமுறி அழுகிறான் அவன்.
முன்பு வாழ்ந்த வாழ்க்கை
பின்பு கிடைக்கவில்லை என்று
முனுகுகின்றான் கிழவன் முத்தையா
அவன் பிள்ளை இன்பங்கள் பலகாண
அவன் துன்பத்தை தினம் காண
தாயிடம் வாழ்ந்த வாழ்க்கை அவன்
சேயிடம் கிடைக்கவில்லை என அழுகிறான்
யாரிடம் சொல்வான் அவன்
இவனது முதுமை இன்பம் பெறவேண்டி
இறைவனை நினைத்து அழுகிறான்
கிடைக்கும் அது மெகுவிரைவில்...



ப.வைஸ்னவி
தரம் –8
மட்/வாழைச்சேனை
இந்துக்கல்லூரி



# சமுர்த்தியில் சிறுவர் திட்டம்


**திருமதி,தேவமனோஹரி பாஸ்கரன்**

தலைமையக சமுர்த்தி முகாமையாளர்


சமுர்த்தி என்பதன் பொருள் "சுபீட்சம்" என்பதாகும். சமூகத்தில் காணப்படும் மிகவும் வறிய நிலையிலுள்ள மனிதர்களை அனைத்து நிலைகளிலும் ஒரு சுபீட்சமான நிலைக்கு கொண்டு வருதல் சமுர்த்தித் திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். இதன் மூலம் தனி மனித குடும்ப, பிரதேச, மாவட்ட மாகாண மட்ட அபிவிருத்தியினூடாக தேசிய சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழிசமைத்தல் இதன் பிரதான பணியாக காணப்படுகின்றது. இந்தவகையில் சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவினூடாக சமூக அபிவிருத்திக்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பிரிவினூடாக இடைவிலகிய மாணவர்களை பாடசாலையில் சேர்த்தல், சிறுவர், முதியோர், மகளிர் போன்ற தேசிய தின நிகழ்வுகளை நடாத்துதல், மதுவினை முற்றாக ஒழித்தல். பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கல், ஆன்மீக நடவடிக்கைகள் மற்றும் குடும்ப அலகினை மேம்படுத்தவதற்கான இன்னோரன்ன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த வகையில் சிறுவர் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் பிரதானமாக நோக்கப்படுகிறது.

1.பாடசாலைவிட்டு இடைவிலகிய மாணவர்களை பாடசாலையில் சேர்த்து அவர்கள் தொடர்ச்சியாக கல்வியை தொடர்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல். பாடசாலை உபகரணங்கள் வழங்கல். "சிசுதிரிய" எனும் மாதந்தோறும் ரூபா 250/- பெறுமதியான புலமை பரிசில் வழங்குதல். அரசு அரசசார்பற்ற நிறுவனங்களை தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்

2.க.பொ.த. ச.தரத்தில் சிறந்த முறையில் சித்தி பெற்று க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு அவர்கள் உயர்தரம் கற்று முடியும் வரை மாதந்தோறும் ரூபா 500/- பெறுமதியான "சிப்தொர" (அறிவொளி) எனும் புலமைப்பரிசில் வழங்கி உதவுதல்.

3.வருடந் தோறும் சிறுவர் தினத்தன்று சிறுவர்களுக்கு கலை கலாச்சார போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தி பரிசில்களை வழங்குதல்.

4.கிராம மட்டத்தில் சிறுவர் தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு அதற்குரிய அதிகாரிகள் ஊடாக தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல்.

மேற்கூறியவாறு பல்வேறு நடவடிக்கைகள் சமுர்த்தி திட்டத்தினூடாக சிறுவர்கள் தொடர்பகாக மேற்கொள்ளப்பட்டு சிறுவர்கள் எதிர்காலத்தில் நாட்டிற்கு ஓர் நற் பிரஜையாக உருவாவதற்கு பேருதவி புரிகின்றது.

# கருகிய மொட்டு



மொட்டாக அரும்பி
பூவாக மலர்ந்து
கொத்தாக வளர்ந்து
கொள் ளை இன்பம் கொடுத்து
பட்டாம் பூச்சியாய்
பாரினில் சிரகடித்து
பள்ளியது சென்று
பாடங்கள் பல பயின்று

வித்தக செல்வமாய்
வீட்டிற்கு ஒளிசேர்க்க
வீறு நடை பயின்று
விடியலை தேடுகையில்
அமாவாசை இருளாக
ஆக்கினைகள் புரிவோர்
ஆட்டி வைத்தனர் -என்
ஆனந்த வாழ்வதனை

செல்ல இடம் ஏதுமில்லை
சொல்ல மொழி தானுமில்லை
சொர்க்கம் என தான் மகிழ்ந்த
சொந்தங்களும் சுமையாக
சொப்பனங்கள் யாவும்
சூனிய மானதே என


ஓலமிடும் அன்னையின்
ஓசையை கேட்டு
ஓடி விளையாட
ஓரிடம் வேண்டாம் என
ஓரங்கட்டி மடிந்தேன்
கருவறையில் நானே.



**ந.யமுனேஸ்வரி**
**நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (சமூக சேவை)**
**பிரதேச செயலகம் – கோறளைப்பற்று.**

## சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக நாடு பூராகவும் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு

இன்றைய சிறுவர்களே இனி வருங்கால அறிஞர்கள். துறைசார் நிபுணர்கள் தலைவர்கள் ஆவர். சிறுவர்களை கண்போன்று மதித்து பேணிப்பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். அந்த வகையில் சமூகத்தில் சிறுவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சவால்கள் மற்றும் அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவற்றை கலைவதற்கு நாடுபூராகவும் பல்வேறு அரச திணைக்களங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. கீழ்குறிப்பிடப்படும் ஒழுங்கமைப்பின் பிரகாரம் இந்நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.




### கிராமிய மட்டம்

1.கிராமிய மட்ட சிறுவர் உரிமைகள்-கண்காணிப்புக்குழு **(VCRMC)**
2.கிராம உத்தியோகத்தர் **(GN)**
4.சமுர்த்தி உத்தியோகாத்தர் **(SDO)**
5.சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் **(CRPO)**

### பிரதேச மட்டம்

1.பிரதேச சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழு**(DCMC)** பிரதேச செயலாளர் **DS,**தலைமையில். (சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் **CRPO,** நன்னடத்தை உத்தியோகத்தர் **(P O).**
2.சமூக சேவை உத்தியோகாத்தர் **(SSO)**
3.சிறுவர்களுடன் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்கள்**(SAVE THE CHILDREN, WORLD VISION,UNICEF)**
4.சமூக பராமரிப்பு நிலையம் **(SCC)**
5.பெண்கள் சிறுவர்களுக்கான பொலீஸ் பிரிவு- பொலிஸ் நிலையங்கள்
6.நன்னடத்தை அலகு வாழைச்சேனை

### மாவட்ட மட்டம்

1.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு **(DCDC)**
(அரசாங்க அதிபர் தலைமையில்)
2.மாவட்ட சிறுவர் நல் லொழுக்க பராமரிப்புத்திணைக்களம்
3.பெண்கள் சிறுவர்களுக்கான பொலிஸ் பிரிவு**(WCD)**
4.மனித உரிமைகள் ஆணைக்குழு
5.சிறுவர்களுடன் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட காரியாலயங்கள்

### மாகாண மட்டம்

1.மாகாண சிறுவர் உரிமைகள் கண்கானிப்புக் குழு
2.மாகாண நன்நடத்தை சிறுவர் பராமரிப்புத்திணைக்களம் (மாகாண ஆணையாளர்)

### தேசிய மட்டம்

1.தேசிய நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களம்
2.தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை **(NCPA)**
3.மனித உரிமைகள் ஆணைக்குழு
4.பொலிஸ் தலைமையகத்தில் பெண்கள் சிறுவர் பிரிவு.


**எஸ்.ஏ.றகீம்**
நிருவாக உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று.

# புகைத்தல் ....




*எமதர்ம ராஜா என்ட பிரைஸஸ் வழங்கும்*

*புகைத்தல் லொத்தர் பரிசு*

Hai ! **பொதுமக்களே !**

எமதர்மராஜா என்ட பிரைஸஸ் வழங்கும் புகைத்தல் லொத்தர் பரிசு பற்றி கூறுகிறேன் . கேளுங்கள் ........

எங்கள் நிறுவனத்தால் அதிகமாக புகைக்கும் அனைவருக்கும் பெறுமதிமிக்க பரிசுகளுண்டு.





1ம் ஜம்போ பரிசு ☞ இருதய நோய்

2ம் பரிசு ☞ புற்று நோய்

3ம் பரிசு ☞ ஆண்மைக் குறைவு

ஆறுதல் பரிசு ☞ உடல் நலக் கேடு

நிரந்தர பரிசு ☞ மனக் கஷ்டம்

சொந்தப்பரிசு ☞ பணக் கஷ்டம்



இத்தனை பெறுமதி மிக்க பரிசுகளை பெறவேண்டுமானால்
அதிகமாக புகையுங்கள்
அதிக, அதிகமாக புகைத்து
உங்களுக்குரியதை தட்டிச் செல்லுங்கள்



என்.தாட்சாயினி
தீபமலர் சிறுவர் கழகம்
கண்ணகி புரம்

# முதியோரை உலகமயமாக்குவோம்



வாழ்க்கை எனும் பூந்தோப்பில்
வாழ்ந்து மணம் கொடுத்தோர்
வளந்து வளம் பெருகி
வண்ணமுடன் மகிழ்ந்திருந்தார்

இளமை எனும் தேர் ஏறி
இனிய உலா வந்தவர்கள்
முதுமை தனை கைப்பிடித்து
முடங்குவதை காண்கின்றோம்.

துன்பத்தை துயரத்தை தோல்விகளை
துக்கத்தை சோகத்தை இன்பத்தை
கவலையை இனிமையை கோபத்தை
பொறுமையை அன்பை சகித்துக் கொண்டவர்கள்
நேற்றைய நிகழ்வினை
நெஞ்சினிலே சுமந்து
இன்றைய கதைகளில்
என்றுமே முடங்கிக் கிடப்பவர்கள்.


உலகமெனும் உருண்டையிலே-சிறு
குழந்தைகள் ஆகிப்போனவர்கள்
முற்றாக தமது உணர்வை
எப்போதும் மறந்து நிற்பவர்கள்.

பெருமையுடன் அவர்கள் செயலை
புரிந்திட வைத்தல் வேண்டும்
அருமையுடன் வார்த்தையாலே
அன்புடன் பேச வேண்டும்.

கல்வியுடன் செல்வம் தந்து
கவலையுடன் நீர்த்து நிற்கும்
அவலமாய் இருக்கும் முதியோர்க்கு
பண்புடன் உதவி புரிவோம்
முதியோர்கள் எல்லா நாட்டின்
தேசிய அருஞ் சொத்தாய்
வகித்திட வழிகள் செய்யும்
வரலாற்றை எழுதி வைப்போம்.

காலம் எனும் ஓவியமாய்
இருக்கும்-முதுமையிலே
வாடிவரும் நம் முதியோரை
உலக மயமாக்குவோம்!

**ஜே.ஜெயரூபினி**
மட்/கறுவாக்கேணி
விக்னேஸ்வரா வித்தியாலயம்



சிறுவர்தின பிரதேச பாடசாலைமட்டப் போட்டியில்
இடைநிலைப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை



# சின்னஞ் சிறு சிறுவர்கள் பாடல்

லாலா......லாலா..........
சின்னஞ் சிறு சிறுவர்கள் நாங்கள்
சிரிக்கும் வண்ணப்பூக்கள் நாங்கள்
கள்ளங்கபடமற்ற வெள்ளை நிற பூக்கள் நாங்கள்.



அம்மா அப்பா ஈன்றெடுத்த
வண்ண வண்ண பூக்கள் நாங்கள்
ஜாதி மத பேதமின்றி ஒன்றாய் பாசத்தோடு
மணம் வீசும் சின்னஞ் சிறு சிறுவர்கள் நாங்கள்

கடவுள் பாதம் தொழுகின்ற
வண்ண வண்ண பூக்கள் நாங்கள்
பள்ளிக்கூடப் பாடம் பயிலுகின்ற
சின்னஞ் சிறு பூக்கள் நாங்கள்



நாளை இந்த நாட்டை ஆளப்போகும்
சின்னஞ் சிறு சிட்டுக்கள் நாங்கள்

- ஜே.ஜேசுராஜா டனுசிக்கா

இளமதி சிறுவர் கழகம்

மட்/ இந்துக்கல்லூரி



# பொன்மொழிகள்

- மலருக்கு மணமும் மனிதனுக்கு குணமும் அவசியம்.
- திறமைதான் ஏழையின் நிரந்தரச் சொத்து.
- திறமை ஆழ்ந்த சிந்தனையில் உருவாகின்றது
- உழைப்பின் வேர்கள் கசப்பானவை,

  ஆனால் அதன் கனிகள் இனிப்பானவை.
- தன் கோபம் தனக்குப் பகை.

  தன் சாந்தம் தனக்குக் காவல்.
- பொறுமையில்லாப் பெண்

  வேரில்லாத மரத்திற்குச் சமம்.
- தர்மம் செய்வதினாலேயே மனிதன்

  கடவுளுக்கு சமனாகின்றான்
- நிகழ்காலத்தைக் கவனி ,

  எதிர்காலம் தானே கவனித்துக் கொள்ளும்.
- பணம் பேச ஆரம்பிக்கும் போது

  உண்மையும் ஊமையாகின்றது
- வார்த்தைகள் தேனீக்களைப் போல்

  அவைகளில் தேனும் உண்டு.கொடுக்கும் உண்டு

**சு.டேயனகாந்தி**

இளந்தளிர் சிறுவர் கழகம்

சுங்காங்கேணி



# சிறுவர் கழகமே !

தேனிலும் இனிமையே நீ தெவிட்டாத மதுரமே.
காலமும் உந்தன் காலடியில் மடிந்துடு இன்பம்
எதடா மானிடா வினைத்திறன்
மிக்க செயல் படைக்க வைத்தாய்.

நல்வழி போதிக்கும் குரு நீயே
அன்பை ஊட்டும் தாய் நீயே
கருவின் இருளை நீக்கி விட்டாய்
காரிருளை வெளிச்சமாக்கி விட்டாய்
என்னுள் வளர்ந்த முள்ளை மலராக்கினாய்

எமது களிப்பு எமது மகிழ்ச்சி எமது எண்ணம்
எல்லாம் எங்கள் மனதில் வந்து விட்டாய் கவலை
கள்ளங்கபடம் மதச்சண்டை நமக்குள் இல்லையே
எம்முள் அன்பு மட்டும் வந்து விட்டாய் ஏதடா பிரிவு?

எமது நாடு எமது மக்கள் எமது சொந்தம் என்ற
எண்ணம் மட்டும் வந்து விட்டால் இல்லையே துயரம்
உங்கள் மனத்தை மழலைப் போல் மலர விடுங்கள்
எங்கும் தங்கும் இறைவன்
எம் உள்ளமதில் வாழ்ந்திடுவார்.

**அ.சிந்து**
உதய நிலா சிறுவர்கழகம்
வினாயக புரம்
வாழைச்சேனை.

# சிறுவர் நலன் காப்போம்

சிறுவர்கள் எமது சொத்து
பாடசாலையில் படிக்க வேண்டிய சிறார்கள்
ஓடாய் தேய்ந்து உழைப்பதேனோ?
வீட்டு வேலை,தோட்ட வேலை,
வியாபார நிலையத்தில் வேலை என்று

காலை தொட்டு மாலைவழைர
கடுமையாக உழைக்கும் சிறார்கள்
இரவு நேர வேலைகளில் இரக்கமின்றிப்
வேதனையைப் பாரீரே யாரறிவார்?

தகப்பனோ குடி வெறியில் தவழ்கிறான்
தாயோ மனவேதனையில் மாய்கிறாள்
தன் வயதுச் சிறார்கள் எல்லாம்
தாராளமாய்ப் படிக்கையிலே

தனக்கு மட்டும் இந்தத்தண்டனையா என்று
துடிக்கும் சின்னஞ் சிறு மனதை
சிதற விடாது பாதுகாக்க
புறப்படுவோம் நாம் வாரீர்

சிறார்கள் என்னும் எமது சொத்தை
சிறப்பான முறையில் பபாதுகாப்போம்
வருங்காலத் தலைவர் அவர்கள் சுதந்திரமாய்
படிக்க வேண்டும்! படிக்க வேண்டும்!

ஹ.அபினயா
மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம்
கீழ்ப்பிரிவு

கோறளைபபறறு வாழைசசேனை பிரதேச செயலாளா பிரிவிறகுள அங்கம வகிககும கிராம மடட முதியோா அமைபபுககள

| கிராம மட்ட முதியோர் அமைப்பின் பெயர் | அங்கத். எண்ணிக்கை | ஆரம்பிக்கப்பட்ட வருடம் | கிராம சேவகர் பிரிவு |
|---|---|---|---|
| 01 அன்னை சாராதாதேவி | 38 | 20.12.2005 | மீராவோடை தமிழ் 202 |
| 02 கிராமிய முதியோர் அமைப்பு | 83 | 16.11.2003 | கறுவாக்கேணி 202 A |
| 03 ஆதவன் முதியோர் சங்கம் | 120 | 27.11.2005 | கிண்ணையடி 202 B |
| 04 முன்னேஸ்வரன் வளர்ந்தோர் அமைப்பு | 73 | 16.06.2005 | சுங்காங்கேணி 202 C |
| 05 வளர்ந்தோர் சங்கம் | 33 | 12.12.2005 | கும்புறுமூலை 203 B |
| 06 கலைமகள் வயோதிப நலன்புரிச் சங்கம் | 73 | 11.12.2005 | கல்குடா204 |
| 07 விநாயகர் முதியோர் சங்கம் | 103 | 10.12.2005 | கல்மடு 204 A |
| 08 முதியோர் நலன்புரிச் சங்கம் | 91 | 13.12.2005 | வாழைச்சேனை 205 |
| 09 வள்ளுவர் வயோதிபர்கள் சங்கம் | 91 | 17.11.2007 | புதுக்குடியிருப்பு 205 A |
| 10 கம்பன் கிராமிய வளர்ந்தோர் அமைப்பு | 84 | 20.12.2005 | பேத்தாழை 205 B |
| 11 முதியோர் சங்கம் | 53 | 01.12.2005 | நாசிவன்தீவு 205 C |
| 12 முதியோர் சங்கம் | 28 | 01.12.2005 | கண்ணகிபுரம் 205 D |

# எப்போது

பாரம் சுமக்கின்றாய்,
பாத்திரம் கழுவுகின்றாய்,
ஆடம்பர வாகனத்தை
ஆமைசயாய் துடைக்கின்றாய்.
கூலிக்காக வெயிலில் சுருளுகிறாய்,
வயிற்றுப் பிழைப்புக்காக
வருந்தி உழைக்கிறாய்
அதிகாரம் செய்து உன்னை,
அடக்கி ஆளும் கைகள்
உன் பிஞ்சுக்கரங்களில்
எழுத்தாணி பிடிக்க அதிகாரக்குரல்
கொடுக்கப்போவது எப்போது....?

**து.டனுசிகா**
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி
இளமதி சிறுவர் கழகம்

### சர்வதேச சிறுவர்தின,முதியோர் வாரம் - 2011

### பிரதேச மட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி முடிவுகள்

**கட்டுரை இடை நிலைப்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | அ.அர்ச்சனா | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 2ம் இடம் | ம.ருசாந்தி | மட்/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம் |
| 3ம் இடம் | அ.புலோஜிதா | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

**கட்டுரை மேற்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சி. கோமஜெயந்தன் | மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 2ம் இடம் | க.அபிலாஷ் | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 3ம் இடம் | செ.மிதுளா | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

**பேச்சு கீழ் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செ.அக்ஷிகா | மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |
| 2ம் இடம் | வி.சஜானி | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 3ம் இடம் | சிதாட்சாயினி | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

**பேச்சு இடைநிலைப் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சி.பவித்திரா | மட்/புதுக்குடியிருப்பு வாணி வத்தியாலயம் |
| 2ம் இடம் | நா.சகானா | மட/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 3ம் இடம் | அ.புலோஜிதா | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

**கவிதை கீழ்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | செ.அக்ஷிகா | மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |
| 2ம் இடம் | ஹ.அக்ஷனா | மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |
| 3ம் இடம் | செ.சதுஜன் | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

**கவிதை இடை நிலைப்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ஜே.ஜெயரூபினி | மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 2ம் இடம் | ஸ்ரீ.துஷ்யந்தி | மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |
| 3ம் இடம் | ஜீ.ரனேக்கா | மட்/புதுக்குடியிருப்பு வாணி வத்தியாலயம் |
| 3ம் இடம் | நா.சகானா | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |

**நாடகம் திறந்த பிரிவு**

| | |
|---|---|
| 1ம் இடம் | மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |
| 2ம் இடம் | மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 3ம் இடம் | மட்/மீறாவோடை அ.த.க.பா |

**சித்திரம் கனிஷ்ட பிரிவு**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ர.டெல்சிகிறசென்சியா | மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி |
| 2ம் இடம் | ஜீ.பிரவீனன் | மட்/மீறாவோடை அ.த.க.பா |
| 3ம் இடம் | கி.கீர்த்திகா | மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் |

# நன்றிகள்

இவ்வருட சர்வதேச சிறுவர்தின முதியோர்வார விழாவிலும்,மலர்வெளியீட்டிலும் எங்களோடு இணைந்து கொண்ட அரச அரசார்பற்ற நிறுவனங்கள்,பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள்,V.C,R.M.C, D.C.M.C,உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரது பங்களிப்பும் போற்றத்தக்கதாகும்.

இக்கன்னி வெளியீட்டை வெளியிடுவதற்கு பக்க பலமாக நின்று அனுமதி வழங்கி,நெறிப்படுத்தி, எம்மை சிறப்பாக வழிப்படுத்தும் எமது பிரதேச செயலாளர் திரு எஸ்.கிரிதரன் அவர்களுக்கும் உதவி பிரதேச செயலாளர் திரு.சு.ராஜ்பாபு அவர்களுக்கும் எனது முதற்கண் சிரம் தாழ்த்திய நன்றிகள்.

சிறப்பு மலர் உருவாக்கத்திற்கு வாழ்த்துச்செய்தி வழங்கியவர்கள், மற்றும் ஆக்கங்கள் தந்துதவிய படைப்பாளிகள்,மாணவர்கள், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள், அதிபர்கள், நடுவர்களாக கடமையாற்றியவர்களுக்கும், எங்களோடு இணைந்து செயற்பட்ட சமூக சேவை பிரிவினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது தனிப்பட்ட நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதல் முயற்சியின் வெற்றிக்கு நிதி உதவி வழங்கி ஊக்குவித்த அரச அரச சார்பற்ற நிறுவனங்களான Save the Children,World Vision இற்கும் விழாவை சிறப்பாக கொண்டாட இணைந்து கொண்ட வாழைச்சேனை பிரதேச சபை,ESCO,YMCA ற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்

மேலும் இம்மலரை குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டு தந்த மினா அச்சக உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் ,உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் பிரதேச செயலக சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"பிள்ளைகளின் நலன் காக்க

அனைவரும் ஒன்றிணைவோம்....."



அ.அழகுராஜ்

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்,

பிரதேச செயகம்,கோறளைப்பற்று,

வாழைச்சேனை.



Save the Children

ESCO

YMCA

World Vision®